அலகு 12

# தனியாள் வணிகரின் இறுதிக் கணக்குகள் - I

## பொருளடக்கம்


12.1 அறிமுகம்

12.2 இறுதிப் பதிவுகள் மற்றும் தொடக்கப் பதிவு

12.3 வியாபாரக் கணக்கு

12.4 இலாப நட்டக் கணக்கு

12.5 இருப்புநிலைக் குறிப்பு

12.6 இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்


MHH3H7

## கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- இறுதிக் கணக்குகளின் பொருள் மற்றும் அவை தயாரிப்பதன் நோக்கம் பற்றி புரிந்து கொள்ளுதல்
- வியாபார, இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரித்தல்

## நினைவு கூற வேண்டிய கருத்துகள்

தனி வணிகரின் இறுதிக்கணக்குகள்-I கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- கணக்கியல் செயல்முறை
- இருப்பாய்வு
- இரட்டைத்தன்மைக் கருத்து, புராதன அடக்கவிலைக் கருத்து, காலக்கருத்து மற்றும் பொருத்துகைக் கருத்து
- முதலினச் செலவிற்கும் வருவாயினச் செலவிற்கும் இடையேயான வேறுபாடுகள்
- முதலின வரவுகளுக்கும் வருவாயின வரவுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள்

## தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியச் சொற்கள்


- இறுதிக் கணக்குகள்
- நிதிநிலை அறிக்கைகள்
- வருமான அறிக்கை
- வியாபாரக் கணக்கு
- இலாப நட்டக் கணக்கு
- விற்ற சரக்கின் அடக்க விலை
- மொத்த இலாபம்
- நிகர இலாபம்
- நிதி நிலை
- இருப்புநிலைக் குறிப்பு

## 12.1 அறிமுகம்

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** ஒரு வியாபாரி முதலாண்டு இறுதியில் தன்னுடைய வியாபாரத்தில் ஈட்டிய இலாபத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறார். இருப்பாய்வு, ஈட்டிய இலாபத்தைக் காட்டும் என நினைக்கிறீர்களா? அவர் எவ்வாறு இலாபத்தைக் கண்டுபிடிப்பார்?

வணிக நிறுவனங்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், அத்தகைய நடவடிக்கைகள் மூலம் வருமானம் ஈட்டுவதற்காகவும் நிதி திரட்டுதல், சொத்துக்கள் வாங்குதல் மற்றும் பல்வேறு செலவுகளை மேற்கொள்கின்றது. இந்த நடவடிக்கைகள், முதலில் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டு, பின்னர் பேரேட்டில் பொதுவான தலைப்புகளில் வகைப்படுத்தப்படுகின்றன. பேரேட்டு இருப்புகளைக் கொண்டு தயாரிக்கப்படும் இருப்பாய்வு, கணக்கேட்டுப் பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சரிபார்க்க உதவுகிறது. ஆனால், இதுவே இறுதிநிலை அல்ல. வணிக நிறுவனங்கள் மேற்கொள்ளும் வணிக நடவடிக்கைகளின் முடிவுகளையும், நிதி சார்ந்த நிலைப்பு தன்மையையும் அவ்வப்போது தெரிந்து கொள்ள விரும்புகின்றன. அதாவது, வணிகத்தின் இலாபத்தன்மையையும், நிதிநிலையையும் அறிந்து கொள்ள விரும்புகின்றன. இவற்றை இறுதிக் கணக்குகள் அல்லது நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இருப்பாய்வு காட்டும் பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகள் அடிப்படையில், இறுதிக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டிறுதியில் வழக்கமாக தயாரிக்கப்படுகிறது.




இறுதிக் கணக்குகள் அல்லது நிதிநிலை அறிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

(அ) வருமான அறிக்கை அல்லது வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு

(ஆ) நிதி நிலை அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பு

நிதிநிலை அறிக்கைகள் பின்வரும் நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகிறது.

(i) ஒரு நிறுவனத்தின் நிதிச்செயல்திறனை அறிந்து கொள்ள

(ii) ஒரு நிறுவனத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள

வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகின்றன. வருமான அறிக்கை ஒரு கணக்கியல் காலத்திற்கு எவ்வாறு இலாபம் அல்லது நட்டம் கணக்கிடப்படுகிறது என்பதைக் காட்டுகின்றது. ஈட்டிய வருவாய் மற்றும் அவ்வருவாயை ஈட்டுவதற்காகச் செய்த செலவுகள் பொருத்துகைக் கொள்கைபடி பொருத்தமான தலைப்பின் கீழ் வருமான அறிக்கையில் காட்டப்படுகின்றது. அனைத்துப் பெயரளவுக் கணக்குகள் மற்றும் சரக்குகள் தொடர்பான கணக்குகள் உரிய கணக்காண்டில் மட்டும் எடுத்துகொள்ள வேண்டுமே தவிர அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது. மேலும், நிதிச் செயல்திறனை நிர்ணயிக்க இவ்விவரங்கள் மட்டுமே ஒப்பிடப்பட வேண்டும். எனவே, கணக்காண்டின் முடிவில் அனைத்து பெயரளவு கணக்குகள் (அதாவது செலவுகள், நட்டங்கள், வருவாய்கள், ஆதாயங்கள், கொள்முதல், கொள்முதல் திருப்பம், விற்பனை மற்றும் விற்பனைத் திருப்பம்) முடிக்கப்பட்டு வருமான அறிக்கை மற்றும் வியாபார இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.



Accountancy Ch 12_TM.indd 257 25-01-2020 14:58:51

அவ்வாறு விவரங்களை மாற்றும்போது சரக்குகள் கொள்முதல் மற்றும் விற்பனை செய்ததினால் ஏற்பட்ட முடிவுகள், ஒட்டுமொத்த வணிகச் செயல்பாடுகள் மற்றும் நிதிச் செயல்பாடுகளின் முடிவுகள் தனித்தனியாக கொடுக்கப்பட வேண்டும். எனவே வருமான அறிக்கை இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. முதல் பகுதியான வியாபாரக் கணக்கு, சரக்குகள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதால் ஏற்படும் முடிவுகளையும், இரண்டாவது பகுதி வணிகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனையும் காட்டுகிறது. மேலும், இரண்டாவது பகுதி செயல்பாடுகளின் முடிவுகளையும் ஒட்டுமொத்த நிதிச்செயல்பாட்டுத்திறனையும்தனித்தனியாக கொடுக்கும் வகையில்தயாரிக்கப்படலாம். அனைத்து நேரடிச் செலவுகள் மற்றும் சரக்குகள் தொடர்பான விவரங்கள் வருமான அறிக்கையின் முதல்பகுதியான வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். அனைத்து மறைமுகச் செலவுகள், நட்டங்கள் மற்றும் மறைமுக வருவாய்கள், ஆதாயங்கள் வியாபாரக் கணக்கின் நிகரமுடிவுடன் இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

## 12.2 இறுதிப் பதிவுகள் மற்றும் தொடக்கப்பதிவு

### 12.2.1 இறுதிப் பதிவுகள்

வியபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிப்பதற்கு ஏதுவாக அனைத்துப் பெயரளவுக் கணக்குகளின் இருப்புகளும் கணக்காண்டின் இறுதிநாளில் முடிக்கப்பட வேண்டும். உரிய குறிப்பேட்டில் தேவையான இறுதிப்பதிவுகள் செய்வதன் மூலம் இது நடைபெறுகிறது. கொள்முதல் கணக்கு பற்று இருப்பையும், கொள்முதல் திருப்பக் கணக்கு வரவு இருப்பையும் கொண்டிருக்கும். கணக்காண்டின் இறுதியில் கொள்முதல் திருப்பக் கணக்கு முடிக்கப்பெற்று கொள்முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

அதே போன்று, விற்பனைக் கணக்கு வரவு இருப்பையும், விற்பனைத்திருப்பக் கணக்கு பற்று இருப்பையும் கொண்டிருக்கும். கணக்காண்டின் இறுதியில் விற்பனைத் திருப்பக் கணக்கு முடிக்கப்பெற்று விற்பனை கணக்கிற்கு மாற்றப்படுகிறது. பல்வேறு இறுதிப் பதிவுகள் பின்வருமாறு:

**1. கொள்முதல் திருப்பக் கணக்கு முடிக்கப்பெறும் போது**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் திருப்பக் க/கு | ப | xxx | |
| கொள்முதல் க/கு | | | xxx |
| (கொள்முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டு கொள்முதல் திருப்பக் கணக்கு முடிக்கப்பெற்றது) | | | |

**2. விற்பனைத் திருப்பக் கணக்கு முடிக்கப்பெறும் போது**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| விற்பனை க/கு | ப | xxx | |
| விற்பனைத் திருப்பக் க/கு | | | xxx |
| (விற்பனைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு விற்பனைத் திருப்பக் கணக்கு முடிக்கப்பெற்றது) | | | |

**3. தொடக்கச் சரக்கிருப்பு மற்றும் நேரடிச் செலவுகள் முடிக்கப்பெறும் போது (அதாவது வியாபாரக் கணக்கில் பற்று பக்கம் தோன்றும் விவரங்கள்)**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| வியாபாரக் க/கு | ப | xxx | |
| தொடக்கச் சரக்கிருப்பு க/கு | | | xxx |
| கொள்முதல் க/கு | | | xxx |
| உள்தூக்குக் கூலி க/கு | | | xxx |
| கூலி க/கு | | | xxx |
| அனைத்து பிற நேரடிச் செலவுகள் க/கு (தனித்தனியாக) | | | xxx |
| (பல்வேறு கணக்குகள் முடிக்கப்பட்டு வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |



Accountancy Ch 12_TM.indd 258 25-01-2020 14:58:51

4. **விற்பனை மற்றும் இறுதிச் சரக்கிருப்பு முடிக்கப் பெறும்போது (அதாவது வியாபாரக் கணக்கின் வரவுப்பக்கம் தோன்றும் விவரங்கள்)**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| விற்பனை க/கு | ப | xxx | |
| இறுதிச் சரக்கிருப்பு க/கு | ப | xxx | |
| வியாபாரக் க/கு | | | xxx |
| (வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்பட்டு முடிக்கப்பெற்ற விவரங்கள்) | | | |

5. **மொத்த இலாபம் மற்றும் மொத்த நட்டம் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றும்போது**

**(அ) மொத்த இலாபம் மாற்றும் போது**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| வியாபாரக் க/கு | ப | xxx | |
| இலாப நட்டக் க/கு | | | xxx |
| (மொத்த இலாபம், இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |

**(ஆ) மொத்த நட்டம் மாற்றும் போது**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| இலாப நட்டக் க/கு | ப | xxx | |
| வியாபாரக் க/கு | | | xxx |
| (மொத்த நட்டம், இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |

6. **மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் முடிக்கப்பெறும் போது (அதாவது இலாப நட்டக் கணக்கின் பற்றுப்பக்கம் தோன்றக்கூடிய விவரங்கள்)**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| இலாப நட்டக் க/கு | ப | xxx | |
| அலுவலகச் செலவுகள் க/கு | | | xxx |
| நிர்வாகச் செலவுகள் க/கு | | | xxx |
| விற்பனைச் செலவுகள் க/கு | | | xxx |
| வழங்கல் செலவுகள் க/கு | | | xxx |
| நிதிசார் செலவுகள் க/கு | | | xxx |
| ஒதுக்கு க/கு | | | xxx |
| தேய்மானம் க/கு | | | xxx |
| பிற மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் க/கு (தனித்தனியாக) | | | xxx |
| (பல்வேறு கணக்குகள் முடிக்கப்பட்டு இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |

7. **மறைமுக வருமானங்கள் முடிக்கப்பெறும் போது (அதாவது இலாப நட்டக் கணக்கின் வரவுப்பக்கம் தோன்றக்கூடிய விவரங்கள்)**

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| பெற்ற தள்ளுபடி க/கு | ப | xxx | |
| பெற்ற கழிவு க/கு | ப | xxx | |
| பிற மறைமுக வருமானங்கள் க/கு (தனித்தனியாக) | ப | xxx | |
| இலாப நட்டக் க/கு | | | xxx |
| (இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டு முடிக்கப்பெற்ற விவரங்கள்) | | | |



Accountancy Ch 12_TM.indd 259 25-01-2020 14:58:51

8. நிகர இலாபம் அல்லது நிகர நட்டம், முதல் கணக்கிற்கு மாற்றும் போது

(அ) நிகர இலாபம் மாற்றும் போது

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| இலாப நட்டக் க/கு | ப | xxx | |
| முதல் க/கு | | | xxx |
| (நிகர இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |

(ஆ) நிகர நட்டம் மாற்றும் போது

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| முதல் க/கு | ப | xxx | |
| இலாப நட்டக் க/கு | | | xxx |
| (நிகர நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |

## 12.2.2 தொடக்கப் பதிவு

ஒரு கணக்காண்டின் இறுதியில் முடிக்கப்பெறாத பல்வேறு கணக்குகளின் இருப்புகள் அடுத்த கணக்காண்டிற்கு எடுத்தெழுதப்படுகிறது. உண்மையில், ஒரு கணக்காண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் தோன்றக்கூடிய இருப்புகள், அடுத்த கணக்காண்டிற்குரிய தொடக்க இருப்புகளாக வருகிறது. எனவே, ஒவ்வொரு கணக்காண்டின் துவக்கத்திலும், தொடக்கப்பதிவு உரிய குறிப்பேட்டில் பதிவதன் மூலம் பல்வேறு கணக்குகளின் இருப்புகள் அடுத்த ஆண்டிற்கு எடுத்தெழுதப்படுகிறது. இதற்கான குறிப்பேட்டுப் பதிவு

| விவரம் | | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|
| சொத்துகள் க/கு (தனித் தனியாக) | ப | xxx | |
| பொறுப்புகள் க/கு (தனித் தனியாக) | | | xxx |
| முதல் க/கு | | | xxx |
| (சொத்துகள் மற்றும் பொறுப்புகள் கீழ்கொண்டுவரப்பட்டது) | | | |

## 12.3 வியாபாரக் கணக்கு

வியாபாரம் என்பது இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் சரக்குகள் வாங்குதல் மற்றும் விற்றலைக் குறிக்கின்றது. வியாபாரக் கணக்கு, கணக்காண்டிற்குரிய சரக்குகள் வாங்குதல் மற்றும் விற்றலின் முடிவினைக் காட்டும் ஒரு பெயரளவுக் கணக்கு ஆகும். ஜே.ஆர்.பாட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, "சரக்குகள் வாங்குதல் மற்றும் விற்றலின் முடிவுகளை வியாபாரக் கணக்கு காட்டுகின்றது. இந்த கணக்கினை தயாரிக்கும் போது, சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகளை மட்டுமே சேர்த்துக் கொண்டு பொது, நிர்வாகச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும்".

வியாபாரக் கணக்கு, விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய்க்கும், விற்ற பொருளின் அடக்க விலைக்குமுள்ள வேறுபாட்டை கணக்கிட தயாரிக்கப்படுகிறது. விற்ற பொருளின் அடக்க விலையானது அடக்கவிலையுடன் நேரடித் தொடர்புடையது. நேரடிச் செலவுகளில், கொள்முதல் செய்த சரக்குகளின் கொள்முதல் விலை மற்றும் கொள்முதல் செய்த சரக்குகளை வணிக வளாகம் அல்லது சேமிப்புகிடங்குகளுக்கு கொண்டு வந்து, விற்பனைக்கு தயாரான நிலைக்கு கொண்டு வரும் செலவுகளும் உள்ளடங்கும். ஒரு கணக்காண்டில் கொள்முதல் செய்த அனைத்துச் சரக்குகளும் அதே கணக்காண்டில் விற்கப்படுவதில்லை. எனவே, அந்த ஆண்டிற்குரிய விற்ற பொருளின் அடக்கவிலை கணக்கிட வேண்டியது அவசியமாகிறது. இங்கு கணக்கியல் பொருத்துகைக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது. எனவே, விற்காத சரக்கிருப்பின் அடக்கவிலையை கழிக்க வேண்டும். அதாவது, விற்காத சரக்கிருப்பின் மதிப்பு கழிக்கப்படவேண்டும். ஆனால், தொடக்கச் சரக்கிருப்பில் இருந்தச் சரக்குகள் ஏதேனும் அந்த கணக்காண்டில் விற்கப்பட்டால், அது அவ்வாண்டு செய்த கொள்முதலின் அடக்கவிலையுடன் கூட்டப்படும். உற்பத்தி செய்த பொருளின் அடக்கவிலை ஏதேனும் இருந்தால், விற்ற பொருளின் அடக்க விலையை கண்டறிய, அதையும் கூட்ட வேண்டும்.



Accountancy Ch 12_TM.indd 260 25-01-2020 14:58:51

**விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கச் சரக்கிருப்பு + நிகரக் கொள்முதல் + உற்பத்தி செய்த பொருளின் அடக்க விலை + நேரடிச் செலவுகள் – இறுதிச் சரக்கிருப்பு**

விற்ற தொகை, விற்ற சரக்கின் அடக்கவிலையை விட அதிகமாக இருக்குமேயானால் அதன் வேறுபாடு மொத்த இலாபத்தைக் குறிக்கும். மாறாக, விற்ற சரக்கின் அடக்கவிலை, விற்ற தொகையை விட அதிகமாக இருக்குமேயானால், அதன் வேறுபாடு மொத்த நட்டத்தைக் குறிக்கும்.

விற்பனை – விற்ற சரக்கின் அடக்கவிலை = மொத்த இலாபம்

விற்பனை – மொத்த இலாபம் = விற்ற சரக்கின் அடக்க விலை

### 12.3.1 வியாபாரக் கணக்கு தயாரிக்க வேண்டியதன் தேவை

வியாபாரக் கணக்கு தயாரித்தல் பின்வரும் நோக்கங்களை பூர்த்தி செய்கிறது.

**(i) மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம் பற்றிய தகவல்களைத் தருகிறது**

வியாபாரக் கணக்கு, வணிகத்தின் கணக்காண்டிற்குரிய மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தைக் காட்டுகிறது. இது வணிகர்களுக்கு மொத்த இலாப விகிதத்தை கண்டறிய உதவுகிறது. வியாபாரக் கணக்கு, விற்பனையில் உள்ள குறிப்பிட்ட சதவீதமாக இலாப விகிதத்தை வெளிப்படுத்துகிறது. இது, முந்தைய ஆண்டுகளின் விகிதங்களுடன் ஒப்பீடு செய்யவும், பகுப்பாய்வு செய்யவும் உதவுகிறது. இவ்வாறு, இது எதிர்காலத்திற்கான ஒப்பீடு, பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலுக்குத் தேவையான தகவல்களைத் தருகிறது.

**(ii) வரக்கூடிய நட்டங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது**

முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் குறைவாக இருந்தால், வரக்கூடிய நட்டங்களைத் தவிர்த்து வணிகத்தை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடிகிறது. உதாரணமாக, சரக்குகளின் விற்பனை விலையை அதிகப்படுத்தலாம் அல்லது நேரடிச் செலவுகளை பகுப்பாய்வு செய்து அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**(iii) நேரடிச் செலவுகள் மற்றும் நேரடி வருமானங்கள் பற்றிய தகவல்களைத் தருகிறது**

சரக்குகளை கொள்முதல் செய்வதற்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளும் நேரடிச் செலவுகள் எனப்படும். அவை வியாபாரக் கணக்கில் பதியப்படுகின்றன. மேலும், வியாபாரக் கணக்கு, நேரடி வருமானமான விற்பனை வருவாயையும் காட்டுகிறது. வியாபாரக் கணக்கின் உதவியுடன் நேரடிச் செலவுகளுக்கும் விற்பனை வருவாய்க்குமுள்ள விழுக்காட்டினைக் கணக்கிடவும், அவ்விகிதங்களை முந்தைய ஆண்டுகளின் விகிதங்களுடன் ஒப்பீடு செய்யவும் முடிகிறது. இவ்வாறு வியாபாரக் கணக்கு நேரடிச் செலவுகளை கட்டுப்படுத்த நிர்வாகத்திற்கு உதவுகிறது.

### 12.3.2 வியாபாரக் கணக்கினைத் தயாரித்தல்

வியாபாரக் கணக்கு ஒரு பெயரளவுக் கணக்கு. தொடக்கச் சரக்கிருப்பு, நிகரக் கொள்முதல் மற்றும் கொள்முதல் மீதான அனைத்துச் செலவுகளும் வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், நிகர விற்பனை மற்றும் இறுதிச் சரக்கிருப்பு, வரவுப்பக்கத்திலும் காட்டப்படும்.

#### (அ) வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கம் இடம்பெறும் இனங்கள்

வியாபாரக் கணக்கின் பற்றுப்பக்கம் இடம்பெறும் இனங்கள் பின்வருமாறு:

**(i) தொடக்கச் சரக்கிருப்பு**

முந்தைய ஆண்டு விற்பனையாகாமல் எஞ்சியுள்ள சரக்கிருப்பு நடப்பாண்டின் தொடக்கச் சரக்கிருப்பாகும். புதிதாகத் தொடங்கப்படும் வணிகத்தில் தொடக்கச் சரக்கிருப்பு இருப்பதில்லை. கொள்முதலுடன் சரிக்கட்டப்பட்டால் இது வருவதில்லை. தொடக்கச் சரக்கிருப்பு அந்த ஆண்டில் விற்பனைச் செய்யப்படுவதால், தொடக்கச் சரக்கிருப்பின் அடக்க விலை வியாபாரக்கணக்கில் சேர்க்கப்படுகிறது.



Accountancy Ch 12_TM.indd 261 25-01-2020 14:58:51

**(ii) கொள்முதல் மற்றும் கொள்முதல் திருப்பம்**

மறுவிற்பனை செய்யும் நோக்குடன் சரக்குகள் வாங்கப்படுவது கொள்முதல் எனப்படும். கொள்முதல் செய்யப்பட்ட சரக்கு, சரக்களித்தோருக்கு திருப்பப்பட்டால் கொள்முதல் திருப்பம் அல்லது வெளித்திருப்பம் எனப்படும். கொள்முதல், ரொக்கக் கொள்முதல் மற்றும் கடன் கொள்முதல் இரண்டையும் உள்ளடக்கியதாகும். நிகரக் கொள்முதல் அதாவது கொள்முதலில் இருந்து கொள்முதல் திருப்பம் கழிக்கப்பட்டு கிடைக்கும் நிகரக் கொள்முதல், வியாபாரக் கணக்கில் பற்றுப்பகுதியில் காட்டப்படும்.

**(iii) நேரடிச் செலவுகள்**

சரக்குகளின் கொள்முதல் விலை, கொள்முதல் செய்த சரக்குகளை சேமிப்பு கிடங்குகள் அல்லது வணிக வளாகத்திற்கு கொண்டு வரும் செலவுகள் மற்றும் விற்பனைக்கு தயாரான நிலைக்கு கொண்டு வர செய்யப்படும் அனைத்துச் செலவுகளும் நேரடிச் செலவுகளில் அடங்கும். அவை வியாபாரக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. கீழ்க்கண்டவை நேரடிச் செலவுகளில் உள்ளடங்கும்:

**(அ) உள்தூக்குக் கூலி அல்லது உள் ஏற்றிச்செல் செலவு**

கொள்முதல் செய்த சரக்கினை சேமிப்புக் கிடங்கு மற்றும் வணிக வளாகத்திற்கு கொண்டு வரச் செய்யப்படும் போக்குவரத்துச் செலவு உள்தூக்குக் கூலி அல்லது கொள்முதல் மீதான தூக்குக் கூலி அல்லது உள் ஏற்றிச்செல் செலவு என்று அழைக்கப்படுகிறது.

**(ஆ) கூலி**

கொள்முதல் செய்த சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் கையாளுதல் போன்ற நேரடிப் பணிகளைச் செய்துவரும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகை கூலி எனப்படுகிறது.

**(இ) துறைமுகக் கட்டணம்**

சரக்குகளை கப்பலில் அனுப்ப வேண்டி துறைமுகத்தில் நுழையும் போதும், துறைமுகத்தை விட்டு புறப்படும் போதும் விதிக்கப்படும் கட்டணம் துறைமுகக் கட்டணமாகும். இறக்குமதியின் போது செலுத்தப்படும் தொகை நேரடிச் செலவாகக் கருதப்படுகிறது.

**(ஈ) உள் நுழைவு வரி**

கொள்முதல் செய்த சரக்குகள் நகராட்சி எல்லைக்குள் நுழையும் போது உள்ளூர் அதிகாரிகளால் விதிக்கப்படும் வரி உள் நுழைவு வரி ஆகும்.

**(உ) இறக்குமதி வரி**

சரக்குகள் இறக்குமதியின் போது விதிக்கப்படும் வரி இறக்குமதி வரி எனப்படும்.

**(ஊ) உரிமைத் தொகை**

இது சுரங்கத்தின் உரிமையாளருக்கு அளிக்கப்படும் தொகை அல்லது உரிமையாளரின் உரிமையைப் பயன்படுத்துவதற்கான தொகை ஆகும். இது உற்பத்தி அல்லது உற்பத்தியின் அடக்கவிலையின் அடிப்படையில் செலுத்தப்பட்டால் நேரடிச் செலவாகிறது.

**(எ) நிலக்கரி, எரிவாயு, எரிபொருள் மற்றும் திறன்**

சரக்குகளை விற்பனைக்கு தயாரான நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவைப்படும் நிலக்கரி, எரிவாயு, எரிபொருள் மற்றும் மின்சக்தி போன்றவற்றிற்கு செய்யப்படும் செலவுகள் நேரடிச் செலவுகளாகும்.

**(iv) உற்பத்தி செய்த பொருளின் அடக்கவிலை**

தனிவணிகர் சரக்குகள் உற்பத்தி செய்பவராக இருந்தால் உற்பத்திக் கணக்கு என்ற தனிக் கணக்கு துவங்கப் பெற்று உற்பத்திச் செலவுகள் அனைத்தும் அதில் பதியப்படுகிறது. உதாரணம் மூலப் பொருள்கள், நிலக்கரி, எரிவாயு, எரிபொருள், நீர், மின்சக்தி, தொழிற்சாலை வாடகை, கட்டுமச் செலவு, தொழிற்சாலை ஒளியூட்டுக் கட்டணம், உற்பத்தி பொருட்கள் மீதான உரிமைத் தொகை முதலியன. உற்பத்தி செய்த சரக்குகளின் மொத்த அடக்கவிலையானது வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திற்கு மாற்றப்படுகிறது.



Accountancy Ch 12_TM.indd 262 25-01-2020 14:58:52

### (ஆ) வியாபாரக் கணக்கின் வரவுப் பக்கம் இடம்பெறும் இனங்கள்

வியாபாரக் கணக்கின் வரவுப்பக்கம் இடம் பெறும் இனங்கள் பின்வருமாறு:

**(i) விற்பனை மற்றும் விற்பனைத் திருப்பம்**

ரொக்க விற்பனை மற்றும் கடன் விற்பனை இரண்டையும், விற்பனை உள்ளடக்கியது. விற்பனைக் கணக்கு வரவிருப்பைக் காட்டுகிறது. மாறாக, விற்பனைத் திருப்பக் கணக்கு பற்றிருப்பைக் காட்டுகிறது. விற்பனையிலிருந்து விற்பனைத் திருப்பம் கழிக்கப்பட்டு கிடைக்கும் நிகர விற்பனைத் தொகை வியாபாரக் கணக்கின் வரவு பக்கத்தில் காட்டப்படுகிறது.

**(ii) இறுதிச் சரக்கிருப்பு**

கணக்காண்டின் இறுதியில் விற்பனையாகாமல் எஞ்சியுள்ள சரக்கிருப்பு இறுதிச் சரக்கிருப்பு எனப்படுகிறது. திருத்தம் செய்யப்பட்ட கணக்கியல் தரநிலைகள் 2–ன் படி அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு (சந்தை விலை) இதில் எது குறைவாக உள்ளதோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுகிறது.

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** 'இறுதிச் சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது குறைவாக உள்ளதோ அந்த விலையில் மதிப்பிடப்படுகிறது'. இக்கருத்தில் எந்த கணக்கியல் கோட்பாடு பின்பற்றப்படுகிறது?

## 12.3.3 வியாபாரக் கணக்கு முடிக்கப்பெறுதல்

வியாபாரக் கணக்கின் இரு பக்க கூடுதல் தொகைகளின் வேறுபாடு மொத்த இலாபத்தையோ அல்லது மொத்த நட்டத்தையோ குறிக்கும். வரவுப் பக்கத்தின் கூடுதல் அதிகமாக இருந்தால் இவ்வேறுபாடு மொத்த இலாபத்தைக் குறிக்கும். மாறாக, பற்றுப் பக்கத்தின் கூடுதல் அதிகமாக இருக்குமேயானால் வேறுபாடு மொத்த நட்டத்தைக் குறிக்கும். மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தினை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும்.

## 12.3.4 வியாபாரக் கணக்கின் படிவம்

ப ....... நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | XXX | விற்பனை | XXX | |
| கொள்முதல் | XXX | | கழிக்க: விற்பனைத் | | |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | XXX | XXX | திருப்பம் | XXX | XXX |
| நேரடிச் செலவுகள்: | | | இறுதிச் சரக்கிருப்பு | | XXX |
| உள் ஏற்றிச்செல் செலவு | | XXX | மொத்த நட்டம் கீ/ இ* | | XXX |
| கூலி | | XXX | | | |
| துறைமுகக் கட்டணம் | | XXX | | | |
| உள் நுழைவு வரி | | XXX | | | |
| உரிமைத் தொகை | | XXX | | | |
| இறக்குமதி வரி | | XXX | | | |
| உற்பத்தி செய்த சரக்கின் அடக்கவிலை | | XXX | | | |
| மொத்த இலாபம் கீ/ இ* | | XXX | | | |
| | | XXX | | | XXX |

* வியாபாரக் கணக்கின் வேறுபாட்டுத் தொகை மொத்த இலாபமாகவோ அல்லது மொத்த நட்டமாகவோ இருக்கும்.

வியாபாரக் கணக்கின் தலைப்பு, கணக்காண்டு முழுவதற்கும் உரிய விற்பனை மற்றும் விற்ற சரக்கின் அடக்கவிலையை வெளிப்படுத்துவதால் 'முடிவடையும் ஆண்டிற்குரிய....' என்ற வார்த்தைகளை உள்ளடக்கியுள்ளது.



Accountancy Ch 12_TM.indd 263 25-01-2020 14:58:52

## எடுத்துக்காட்டு 1

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2016, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.1.2016) | 10,000 |
| கொள்முதல் | 26,100 |
| விற்பனை | 40,600 |
| இறுதிச் சரக்கிருப்பு (31.12.2016) | 13,500 |

### தீர்வு

ப 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | விற்பனை | 40,600 |
| கொள்முதல் | 26,100 | இறுதிச் சரக்கிருப்பு | 13,500 |
| மொத்த இலாபம் கீ/இ | **18,000** | | |
| | **54,100** | | **54,100** |

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** பயண முகமை நிறுவனம், காப்பீடு, மற்றும் தணிக்கையர் நிறுவனம் போன்ற சேவை வழங்கும் நிறுவனங்கள் வியாபாரக் கணக்கு தயாரிக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறீர்களா?

## எடுத்துக்காட்டு 2

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து லாவண்யா நிறுவனத்தின் ஏடுகளில் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 16,500 | உள்தூக்குக் கூலி | 1,200 |
| கொள்முதல் | 45,000 | கூலி | 4,800 |
| விற்பனை | 72,000 | எரிபொருள் மற்றும் மின்சக்தி | 3,200 |
| கொள்முதல் திருப்பம் | 500 | இறுதிச் சரக்கிருப்பு | 18,000 |
| விற்பனைத் திருப்பம் | 1,500 | | |

### தீர்வு

**லாவண்யா நிறுவனத்தின் ஏடுகளில்**

ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | 16,500 | விற்பனை | 72,000 | |
| கொள்முதல் | 45,000 | | கழிக்க: விற்பனைத் திருப்பம் | 1,500 | 70,500 |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | 500 | 44,500 | இறுதிச் சரக்கிருப்பு | | 18,000 |
| உள்தூக்குக் கூலி | | 1,200 | | | |
| கூலி | | 4,800 | | | |
| எரிபொருள் மற்றும் மின்சக்தி | | 3,200 | | | |
| மொத்த இலாபம் கீ/இ* | | **18,300** | | | |
| | | **88,500** | | | **88,500** |

## எடுத்துக்காட்டு 3

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 50,000 | கொள்முதல் மீதான துறைமுகக் கட்டணம் | 4,000 |
| உற்பத்தி செய்த சரக்கின் மீதான அடக்கவிலை | 12,000 | கொள்முதல் மீதான இறக்குமதி வரி | 3,500 |
| ரொக்கக் கொள்முதல் | 60,000 | கூலி | 11,000 |
| ரொக்க விற்பனை | 85,000 | விற்பனைத் திருப்பம் | 3,000 |
| கொள்முதல் திருப்பம் | 2,000 | கடன் கொள்முதல் | 35,000 |
| உள்தூக்குக் கூலி | 4,000 | கடன் விற்பனை | 60,000 |
| வெளி ஏற்றிச்செல் செலவு | 3,000 | பிற நேரடிச் செலவுகள் | 7,000 |
| நிலக்கரி மற்றும் எரிபொருள் | 2,500 | | |

### தீர்வு

ப 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | 50,000 | ரொக்க விற்பனை | 85,000 | |
| உற்பத்தி செய்த சரக்கின் மீதான அடக்கவிலை | | 12,000 | கடன் விற்பனை | 60,000 | |
| | | | | 1,45,000 | |
| ரொக்கக் கொள்முதல் | 60,000 | | கழிக்க : விற்பனைத் திருப்பம் | 3,000 | 1,42,000 |
| கடன் கொள்முதல் | 35,000 | | மொத்த நட்டம் கீ/இ | | **45,000** |
| | 95,000 | | | | |
| கழிக்க:கொள்முதல் திருப்பம் | 2,000 | 93,000 | | | |
| உள்தூக்குக் கூலி | | 4,000 | | | |
| நிலக்கரி மற்றும் எரிபொருள் | | 2,500 | | | |
| கொள்முதல் மீதான துறைமுகக் கட்டணம் | | 4,000 | | | |
| கொள்முதல் மீதான இறக்குமதி வரி | | 3,500 | | | |
| கூலி | | 11,000 | | | |
| பிற நேரடிச் செலவுகள் | | 7,000 | | | |
| | | **1,87,000** | | | **1,87,000** |

குறிப்பு : வெளி ஏற்றிச்செல் செலவுகள் நேரடிச் செலவு இல்லை எனவே வியாபாரக் கணக்கில் இடம்பெறுவதில்லை.

## எடுத்துக்காட்டு 4

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்க விலையைக் கணக்கிடுக.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 8,000 |
| கொள்முதல் | 60,000 |
| நேரடிச் செலவுகள் | 5,000 |
| மறைமுகச் செலவுகள் | 6,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 9,000 |



Accountancy Ch 12_TM.indd 265 25-01-2020 14:58:52

**தீர்வு**

விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கச் சரக்கிருப்பு + நிகர கொள்முதல் + நேரடிச்செலவுகள் – இறுதிச் சரக்கிருப்பு

= 8,000 + 60,000 + 5,000 – 9,000

= ₹ 64,000

குறிப்பு : மறைமுகச் செலவுகள், விற்ற சரக்கின் அடக்க விலையில் சேராது.

### எடுத்துக்காட்டு 5

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 70,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 30,000 |
| மொத்த இலாப விகிதம் (விற்பனையில்) | 20% |

**தீர்வு**

விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கச் சரக்கிருப்பு + நிகர கொள்முதல் + நேரடிச்செலவுகள் – இறுதிச் சரக்கிருப்பு

= 20,000 + 70,000 + 10,000–30,000

= ₹ 70,000

விற்பனையை 100 என்று எடுத்துக்கொள்ளவும்

கழிக்க : மொத்த இலாபம் ( விற்பனையில் 20%) 20

விற்ற சரக்கின் அடக்கவிலை 80

ஆகையால், மொத்த இலாப விகிதம் விற்ற சரக்கின் அடக்க விலையில் $\frac{20}{80}$ x 100 = 25 %

மொத்த இலாபம் = ₹ 70,000 ல் 25 % அதாவது $\frac{25}{100}$ x 70,000 = ₹ 17,500

விற்பனை = விற்ற சரக்கின் அடக்க விலை + மொத்த இலாபம்

= 70,000 + 17,500 = ₹ 87,500

உங்களுக்குத் தெரியுமா?

மொத்த இலாபம் விற்ற சரக்கின் அடக்க விலையில் 25% ஆக இருக்கும் போது விற்பனையில் 20% ஆக இருக்கிறது.

மொத்த இலாபம் விற்ற சரக்கின் அடக்க விலையில் $33\frac{1}{3}$ % ஆக இருக்கும் போது விற்பனையில் 25% ஆக இருக்கிறது.

## 12.4 இலாப நட்டக் கணக்கு

இலாப நட்டக் கணக்கு வருமான அறிக்கையின் இரண்டாவது பகுதி ஆகும். இது ஒரு பெயரளவுக் கணக்கு. ஒரு வணிக நிறுவனம் மொத்த இலாபம் மற்றும் மொத்த நட்டம் மட்டுமன்றி அவ்வாண்டில் ஈட்டிய நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தையும் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளதாக இருக்கும். எனவே, இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டு அவ்வாண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் அறியப்படுகிறது. இலாப நட்டக்கணக்கு, கணக்காண்டிற்குரிய மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்துடன் அனைத்து மறைமுகச் செலவுகள், நட்டங்கள் மற்றும் அனைத்து மறைமுக வருமானங்கள், ஆதாயங்களை உள்ளடக்கியது. வேறுபாடு நிகர இலாபம் அல்லது நிகர நட்டமாகக் கருதப்படும். பேராசிரியர் கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, இலாப நட்டக் கணக்கு என்பது, "நட்டங்களுக்கு அதிகமாக உள்ள ஆதாயங்களை அறிவதற்காக அல்லது ஆதாயங்களுக்கு அதிகமாக உள்ள நட்டங்களை அறிவதற்காக, அனைத்து ஆதாயங்களையும் மற்றும் நட்டங்களையும் ஒருசேரக் காட்டும் கணக்கு இலாப நட்டக் கணக்கு ஆகும்".



Accountancy Ch 12_TM.indd 266 25-01-2020 14:58:52

### மாணவர் செயல்பாடு

**சிந்தனைக்கு:** நிலைச்சொத்து கொள்முதல் செய்தது இலாபநட்டக் கணக்கில் செலவாகக் காட்டப்பட்டால் இலாபத்தில் என்ன விளைவு ஏற்படும்?

## 12.4.1 இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டியதன் தேவை

இலாப நட்டக் கணக்கு பின்வரும் தேவைகளுக்காக தயாரிக்கப்படுகின்றன:

### (i) நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் கண்டறிய

இலாப நட்டக் கணக்கு உரிமையாளர் ஈட்டிய இலாபம் அல்லது அவருக்கு ஏற்பட்ட நட்டத்தை வெளிப்படுத்துகிறது. வணிக நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் இலாபம் ஈட்டும் திறனை திட்டமிடுவதற்கு இலாபத்தைக் கண்டறிதல் அவசியமாகிறது. ஒரு நிறுவனத்தை பிற நிறுவனங்களுடன் மற்றும் ஒரு நிறுவனத்திற்குள்ளேயே இலாப நட்டக் கணக்கின் விவரங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் மற்ற நிறுவனங்களின் இலாபம் ஈட்டும் திறனையும், ஒரு நிறுவனத்திற்குள் பிற துறைகளின் இலாபம் ஈட்டும் திறனையும் மதிப்பிட முடிகிறது.

### (ii) இலாபம் ஒப்பீடு செய்ய

நடப்பாண்டின் நிகர இலாபம் முந்தைய வருடங்களின் நிகர இலாபத்துடன் ஒப்பிட முடிகிறது. இது வணிகம் திறம்பட செயல்படுகிறதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள உதவுகிறது.

### (iii) செலவுகளை கட்டுப்படுத்த

இலாப நட்டக் கணக்கு நடப்பாண்டின் செலவுகளை முந்தைய ஆண்டுகளின் செலவுகளோடு ஒப்பிட உதவுகிறது. ஒவ்வொரு செலவுக்கும் நிகர விற்பனைக்குமுள்ள விழுக்காட்டினை கணக்கிட முடியும் மற்றும் அவ்விகிதத்தை முந்தைய ஆண்டின் விகிதங்களோடு ஒப்பீடு செய்யவும் முடிகிறது. இந்த ஒப்பீடு தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது.

### (iv) இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பதற்கு உதவுகிறது

இலாப நட்டக் கணக்கு மூலமாக நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் கண்டறிந்த பின்னரே இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க முடியும். நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்படுகிறது. இவ்வாறு இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பதற்கு இலாபநட்டக் கணக்கு உதவுகிறது.

## 12.4.2 இலாப நட்டக் கணக்கு தயாரித்தல்

வியாபாரக் கணக்கிலிருந்து கீழ்க் கொண்டு வரும் மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத் தொகை இலாபநட்டக் கணக்கில் முதலாவதாக பதியப்படுகிறது. அனைத்து மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் இலாபநட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. மறைமுகச் செலவுகள் அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள், விற்பனைச் செலவுகள், வழங்கல் செலவுகளை உள்ளடக்கியது. இலாபநட்டக் கணக்கு பெயரளவுக் கணக்காக இருப்பதால் அனைத்து மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் பற்றுப் பக்கத்திலும், அனைத்து மறைமுக வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள் வரவுப் பக்கத்திலும் காண்பிக்கப்படுகின்றது.

இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கம் இடம்பெறும் இனங்கள் பின்வருமாறு:

**(i) மொத்த நட்டம்**

வியாபாரக் கணக்கு மொத்த நட்டம் வெளிப்படுத்தும்போது, அது இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் காட்டப்படும்.


Accountancy Ch 12_TM.indd 267 25-01-2020 14:58:52

### (ii) மறைமுகச் செலவுகள்

சரக்குகள் கொள்முதலுக்கு தொடர்பில்லாத செலவுகள் மறைமுகச் செலவுகள். அதாவது நிர்வாகச் செலவுகள், அலுவலகச் செலவுகள், விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள் மறைமுகச் செலவுகள் ஆகும்.

**(அ) அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள்**

அலுவலகம் மற்றும் நிர்வாகப் பணிகளுக்காக செய்யப்பட்ட செலவுகள், அதாவது அலுவலகப் பணியாளர்களுக்கு அளித்த சம்பளம், அலுவலக வாடகை, அலுவலக மின் கட்டணம், அஞ்சல் செலவுகள், அச்சு எழுதுபொருள், சட்டச் செலவுகள், தணிக்கையர் கட்டணம், அலுவலக உபகரணங்களின் தேய்மானம் மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகள் முதலியன அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்**

விற்பனை, விற்பனை மேம்பாடு மற்றும் சரக்குகள் வழங்கலுக்கான செலவுகள் அதாவது விளம்பரக் கட்டணம், விற்பனையாளருக்குக் கொடுத்த கழிவு, வெளித்தூக்குக்கூலி, வாராக்கடன், கிடங்கு வாடகை, கட்டுமச் செலவுகள் போன்றவை விற்பனை மற்றும் வழங்கல் செலவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(இ) பிற மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள்**

பிற மறைமுகச் செலவுகளான கடன்மீது வட்டி, பழுதுபார்ப்புச் செலவுகள், தேய்மானம், அறக்கொடை, நிலைச் சொத்துக்கள் விற்றதில் ஏற்பட்ட நட்டம் மற்றும் தீ, திருட்டு போன்ற காப்பீட்டுக்குட்படாத அசாதாரண நட்டங்கள் முதலியன இந்த வகையினத்தில் காட்டப்படுகின்றன.

இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கம் இடம்பெறும் இனங்கள் பின்வருவன:

### (i) மொத்த இலாபம்

வியாபாரக் கணக்கு மொத்த இலாபத்தை வெளிப்படுத்துவதாக இருந்தால், வியாபாரக் கணக்கிலிருந்து கீழ்க் கொண்டு வந்து இலாபநட்டக் கணக்கின் முதல் வரவினமாகக் காட்டப்படும்.

### (ii) பிற வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள்

அனைத்து பிற மறைமுக வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள் இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்படுகின்றது. முதலீடுகள் மீதான வட்டி, பெற்ற வாடகை, பெற்ற தள்ளபடி, பெற்ற கழிவு, வட்டி பெற்றது மற்றும் பங்காதாயம் பெற்றது இவையனைத்தும் மறைமுக வருமானங்கள் ஆகும். நிலைச்சொத்துகள் மற்றும் முதலீடுகள் விற்றதினால் ஏற்பட்ட இலாபம் ஆதாயங்களுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

## 12.4.3 இலாபநட்டக் கணக்கு முடிக்கப் பெறுதல்

அனைத்து மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் பற்றும், அனைத்து மறைமுக வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள் வரவும் செய்த பிறகு, இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கத்தின் மொத்தத் தொகை பற்றுப் பக்கத்தை விட அதிகமாக இருந்தால் அந்த வேறுபாடு நிகர இலாபம் ஆகும். மாறாக பற்றுப் பக்கத்தின் மொத்தத் தொகை வரவுப் பக்கத்தை விட அதிகமாக இருந்தால் அந்த வேறுபாடு நிகர நட்டம் ஆகும். நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** ஒரு அறைகலன் வியாபாரி தனது வீட்டு உபயோகத்திற்காக அறைகலன்கள் சிலவற்றை தனது வணிகத்திலிருந்து எடுத்துக்கொண்டார். இந்த நடவடிக்கையை எவ்வாறு பதிவு செய்வீர்கள்?



Accountancy Ch 12_TM.indd 268 25-01-2020 14:58:52

## 12.4.4 இலாபநட்டக் கணக்கின் படிவம்

ப ....... நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த நட்டம் கீ/ கொ | xxx | மொத்த இலாபம் கீ/ கொ | xxx |
| **அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள்:** | | **மறைமுக வருமானங்கள் :** | |
| சம்பளம் | xxx | பெற்ற வாடகை | xxx |
| வாடகை, வரிகள் மற்றும் வீதங்கள் | xxx | பெற்ற தள்ளுபடி | xxx |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | xxx | பெற்ற கழிவு | xxx |
| அஞ்சல் செலவுகள் | xxx | முதலீடுகள் மீதான வட்டி | xxx |
| சட்டச் செலவுகள் | xxx | எடுப்புகள் மீதான வட்டி | xxx |
| தணிக்கையாளர் கட்டணம் | xxx | பங்குகள் மீதான பங்காதாயம் | xxx |
| நிறுவுகைச் செலவுகள் | xxx | வாராக்கடன் வசூலித்தது | xxx |
| வியாபாரச் செலவுகள் | xxx | நிலைச் சொத்துக்கள் | |
| பொது பயணச் செலவுகள் | xxx | விற்றதில் ஏற்பட்ட இலாபம் | xxx |
| மின் ஒளியூட்டுக் கட்டணம் | xxx | தொழிற் பயிற்சி அளித்ததில் | |
| காப்பீட்டுக் கட்டணம் | xxx | கிடைத்த வருமானம் | xxx |
| **விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்:** | xxx | இதர வரவுகள் | xxx |
| வெளித்தூக்குக் கூலி | xxx | நிகர நட்டம் * | xxx |
| விளம்பரம் | xxx | (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | |
| கழிவு | xxx | | |
| தரகு | xxx | | |
| வாராக்கடன் அல்லது வாரா ஐயக்கடன் ஒதுக்கு | xxx | | |
| ஏற்றுமதி வரி | xxx | | |
| கட்டுமச் செலவுகள் | xxx | | |
| இதரச் செலவுகள் மற்றும் நட்டங்கள்: | | | |
| பழுதுபார்ப்புச் செலவுகள் | xxx | | |
| தேய்மானம் | xxx | | |
| வட்டிச் செலவுகள் | xxx | | |
| அளித்த தள்ளுபடி | xxx | | |
| கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு | xxx | | |
| வங்கிக் கட்டணம் | xxx | | |
| முதல் மீது வட்டி | xxx | | |
| நன்கொடை மற்றும் அறநிதி | xxx | | |
| நிலைச் சொத்துகள் விற்றதில் ஏற்பட்ட நட்டம் | xxx | | |
| அசாதாரண நட்டம் – தீ, திருட்டு போன்றவற்றினால் ஏற்பட்ட,காப்பீட்டுக்கு உட்படாத நட்டம் | xxx | | |
| இதரச் செலவுகள் | xxx | | |
| நிகர இலாபம்* (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | xxx | | |
| | xxx | | xxx |

* இருப்புத் தொகை நிகர இலாபம் அல்லது நிகர நட்டமாக இருக்கும்

### மாணவர் குறிப்பு

வணிகத்திற்கு தொடர்பில்லாத செலவுகள் இலாபநட்டக் கணக்கில் காட்டப்பட மாட்டாது. எடுத்துக்காட்டு, உரிமையாளரின் சொந்த செலவுகள் அதாவது உரிமையாளரின் வீட்டு மற்றும் சொந்தச் செலவுகள், வருமான வரி மற்றும் உரிமையாளரின் ஆயுள் காப்பீட்டுக் கட்டணம் முதலியன. இத்தகையச் செலவுகள், வணிக நிதியிலிருந்து செலுத்தப்பட்டால், உரிமையாளரின் எடுப்புகளாக வகைப்படுத்தப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் முதலிலிருந்து கழிக்கப்படுகிறது.

வருவாயின வரவுகள் மற்றும் வருவாயினச் செலவுகள் மட்டும் வியாபாரக் கணக்கில் இடம்பெறுகிறது. முதலின வரவுகள், முதலின ஆதாயங்கள், முதலினச் செலவினங்கள் மற்றும் முதலின நட்டங்கள் வியாபாரக் கணக்கில் இடம்பெறுவதில்லை. கணக்காண்டிற்குத் தொடர்புடைய முதலின பகுதி மட்டுமே இடம் பெறுகிறது. எடுத்துக்காட்டு, நிலைச்சொத்துக்கள் மீதான தேய்மானம். நிலைச்சொத்து வாங்குதல் முதலினச் செலவாகும். ஆனால், அந்த நிலைச்சொத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தேய்மானம், நடப்பு கணக்காண்டிற்குரியதாக இருப்பின் அது வருவாயினமாகும்.



Accountancy Ch 12_TM.indd 269 25-01-2020 14:58:52

### எடுத்துக்காட்டு 6

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் கீ/ கொ | 1,50,000 | விளம்பரச் செலவுகள் | 3,800 |
| வெளித் தூக்குக்கூலி | 25,500 | வாராக்கடன் | 8,500 |
| அலுவலக வாடகை | 7,000 | பங்காதாயம் பெற்றது | 9,000 |
| அலுவலக எழுதுபொருள் | 3,500 | பெற்ற தள்ளுபடி | 4,600 |
| வழங்கல் செலவுகள் | 2,000 | பெற்ற வாடகை | 7,000 |

**தீர்வு**

**ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு வ**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வெளித் தூக்குக்கூலி | 25,500 | மொத்த இலாபம் கீ/ கொ | 1,50,000 |
| அலுவலக வாடகை | 7,000 | பங்காதாயம் பெற்றது | 9,000 |
| அலுவலக எழுதுபொருள் | 3,500 | பெற்ற தள்ளுபடி | 4,600 |
| வழங்கல் செலவுகள் | 2,000 | பெற்ற வாடகை | 7,000 |
| விளம்பரச் செலவுகள் | 3,800 | | |
| வாராக்கடன் | 8,500 | | |
| நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | **1,20,300** | | |
| | **1,70,600** | | **1,70,600** |

### எடுத்துக்காட்டு 7

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2017, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் கீ/ கொ | 60,000 | பெற்ற வட்டி | 2,100 |
| வெளி ஏற்றிச்செல் செலவு | 15,000 | நிதிசார் செலவுகள் | 4,000 |
| விற்பனை மீதான கட்டுமச் செலவுகள் | 12,000 | அலுவலக வாகனங்கள் மீதான பழுது பார்ப்புச் செலவுகள் | 8,000 |
| விற்பாண்மையர் கழிவு | 1,300 | அலுவலக வாகனங்கள் மீது தேய்மானம் | 3,000 |
| மேம்பாட்டுச் செலவுகள் | 10,200 | செலுத்திய வட்டி | 9,000 |
| அலுவலக தொலைபேசிக் கட்டணம் | 22,400 | பெற்ற வாடகை | 7,000 |
| வாராக்கடன் வசூலித்தது | 4,000 | உள் ஏற்றிச்செல் செலவு | 4,000 |

**தீர்வு**

**ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு வ**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வெளி ஏற்றிச்செல் செலவு | 15,000 | மொத்த இலாபம் கீ/கொ | 60,000 |
| விற்பனை மீதான கட்டுமச் செலவுகள் | 12,000 | வாராக்கடன் வசூலித்தது | 4,000 |
| விற்பாண்மையர் கழிவு | 1,300 | பெற்ற வட்டி | 2,100 |
| மேம்பாட்டுச் செலவுகள் | 10,200 | பெற்ற வாடகை | 7,000 |
| அலுவலக தொலைபேசிக் கட்டணம் | 22,400 | நிகர நட்டம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | **11,800** |
| நிதிசார் செலவுகள் | 4,000 | | |
| அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்புச் செலவுகள் | 8,000 | | |
| அலுவலக வாகனங்கள் மீது தேய்மானம் | 3,000 | | |
| செலுத்திய வட்டி | 9,000 | | |
| | **84,900** | | **84,900** |

**குறிப்பு :** உள் ஏற்றிச்செல் செலவு நேரடிச் செலவாக இருப்பதால் இலாப நட்டக் கணக்கில் காட்டப் படுவதில்லை.

மாணவர் செயல்பாடு

**சிந்தனைக்கு:** வருமான அறிக்கை மூலமாக ஒரு வணிகம் எவ்வளவு சொத்துக்களை கொண்டுள்ளது அல்லது எந்த அளவுக்கு கடன்பட்டுள்ளது என்பதை அறிய முடியுமா?

## 12.5 இருப்புநிலைக் குறிப்பு

இருப்புநிலைக் குறிப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் வணிகத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிலை பற்றிய அறிக்கையாகும். சொத்துகள் வணிகத்திற்கு சொந்தமான வளங்களைக் குறிக்கிறது. பொறுப்புகள் என்பது வணிகம் மீது எழுப்பப்படும் கோரிக்கை உரிமைகள் ஆகும். வணிக நிறுவனத்தின் நிகர இலாபம் மற்றும் நிகர நட்டம் கண்டறிந்த பிறகு, வணிகத்தின் உரிமையாளர் வணிகத்தின் நிதி நிலையை அறிய விரும்புகிறார். இதற்காக, இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. இது வணிக நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய அனைத்து சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொகை உள்ளடக்கிய அறிக்கை ஆகும். இவ்வாறு தயாரிக்கப்படும் அறிக்கை இருப்புநிலைக் குறிப்பு என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், இது அனைத்து பெயரளவுக் கணக்குகள் முடிக்கப்பெற்று வியாபார இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட இருப்புகள் தவிர மீதமுள்ள பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளைத் தருகிறது. அனைத்து ஆள்சார் மற்றும் சொத்துக் கணக்குகளின் இருப்புகள் சொத்துகளாகவும், பொறுப்புகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் இடது கைபக்கமும், மற்றும் சொத்துகள் வலது கைபக்கமும் இடம்பெறுகிறது.

ஜே.ஆர். பாட்லிபாய் அவர்கள் கூற்றுப்படி, "இருப்புநிலைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட நாளில் நிறுவனத்தின் உண்மையான நிதி நிலையை அளவிடுவதற்காக தயாரிக்கப்படுகிறது".

### 12.5.1 இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டியதன் தேவை

இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டியதன் தேவைகள் பின்வருமாறு.

(அ) இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுவதன் முக்கிய நோக்கம், ஒரு குறிப்பிட்ட நாளில் நிறுவனத்தின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ளுதல்.

(ஆ) இது நிறுவனத்தின் பல்வேறு சொத்துகளின் அடக்க விலையை ஒப்பிடுவதற்கு உதவுகிறது. அதாவது இறுதி சரக்கிருப்புத் தொகை, கடனாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை, கற்பனைச் சொத்துகள் தொகை போன்றவை. மேலும், ஒரே தன்மையுடைய சொத்துகளும் பொறுப்புகளும் குழுக்களாக வகைப்படுத்தப்பட்டு இருப்புநிலைக்குறிப்பு மூலம் வழங்கப்படுவதால், இந்த சொத்துகளையும், பொறுப்புகளையும் ஒப்பீட்டு ஆய்வு செய்வது எளிதாகிறது. இது நிறுவனத்தின் பல்வேறு பொறுப்புகளையும் ஒப்பீடு செய்யவும் உதவுகிறது.

(இ) இது நிறுமத்தின் கடன் தீர்க்கும் சக்தியை கண்டறிய உதவுகிறது. சொத்துகள், புற பொறுப்புகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்போது நிறுமத்தின் கடன் தீர்க்கும் சக்தி சாதகமாக இருக்கிறது. மாறாக, புற பொறுப்புகள், சொத்துகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்போது நிறுமத்தின் கடன் தீர்க்கும் சக்தி சாதகமாக இல்லை எனலாம்.

### 12.5.2 இருப்புநிலைக் குறிப்பின் இயல்புகள்

இருப்புநிலைக் குறிப்பின் இயல்புகள் பின்வருமாறு:

(அ) இருப்புநிலைக் குறிப்பு இறுதிக் கணக்குகளின் ஒரு பகுதியாகும். மேலும் இருப்புநிலைக் குறிப்பு ஒரு அறிக்கையே, அன்றி, கணக்கல்ல. இதில் பற்று அல்லது வரவுப் பக்கங்கள் கிடையாது.

(ஆ) இருப்புநிலைக் குறிப்பு, இருப்புகளைக் கொண்ட ஆள்சார் மற்றும் சொத்துக் கணக்குகளின் தொகுப்பாகும். வலதுகைப்பக்கம் காட்டப்படுகின்ற பற்று இருப்புகளைக் கொண்ட ஆள்சார் மற்றும் சொத்துக் கணக்குகள் சொத்துகள் எனவும், இடதுகைபக்கம் காட்டப்படுகின்ற வரவிருப்புகளைக் கொண்ட ஆள்சார் மற்றும் சொத்துக் கணக்குகள், பொறுப்புகள் எனவும் அழைக்கப்படுகின்றது.



Accountancy Ch 12_TM.indd 271 25-01-2020 14:58:53

(இ) இருப்புநிலைக் குறிப்பின் இரு பக்கங்களின் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டும். கூட்டுத்தொகை சமமாக இல்லையெனில், பிழை இருப்பதைக் காட்டுகின்றது. இது இரட்டைத்தன்மைக் கருத்தை பின்பற்றி வரும் கணக்கியல் சமன்பாட்டை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும். அதாவது, சொத்துகள் = முதல் + பொறுப்புகள்.

(ஈ) இருப்புநிலைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லாமல் குறிப்பிட்ட நாளன்று தயாரிக்கப் படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட நாளன்றைய வியாபாரத்தின் நிதி நிலையை வெளிப்படுத்துகிறது. இது தயாரிக்கப்படும் நாளுக்குரிய இருப்புகளை மட்டும் தருகிறது.

(உ) நிறுவனத் தொடர்ச்சி கருத்துபடி நிறுவனத்தின் நிதிநிலையைக் காட்டுகிறது.

### 12.5.3 இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகளும் பொறுப்புகளும் குழுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்

இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகளும் பொறுப்புகளும் குழுப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட ஒழுங்கில் வரிசைப்படுத்தி காண்பிக்கப்படுகிறது. குழுப்படுத்துதல் என்பது ஒரே தன்மையுடைய இனங்களை ஒரு பொதுவான தலைப்பின் கீழ் கொண்டுவருதலாகும். உதாரணமாக, பல்வேறு வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய தொகை 'பற்பல கடனாளிகள்' என்ற தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது. அதுபோல, ரொக்கம், வங்கி, கடனாளிகள், சரக்கிருப்பு மற்றும் பிற நடப்புச் சொத்துகள் 'நடப்புச் சொத்துகள்' என்ற தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது,

ஒழுங்குப்படுத்துதல் என்பது, பல்வேறு சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தகுந்த ஒழுங்கில் வரிசைப்படுத்துதலாகும். ஒழுங்குப்படுத்துதல் கீழ்க்கண்ட இரு வழிகளில் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படுகிறது.

#### (அ) நீர்மைத்தன்மை ஒழுங்கு

இந்த முறையில், மிக எளிதாக ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துகள் இருப்புநிலைக் குறிப்பில் முதலில் காட்டப்படுகிறது. அதனைத்தொடர்ந்து, அடுத்து சிறிது குறைவாக எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துகள் காட்டப்படுவதால், நீர்மைத் தன்மை குறைந்த, நற்பெயர் இருப்புநிலைக் குறிப்பில் கடைசியாக காண்பிக்கப்படுகிறது. அதுபோலவே, மிக விரைவில் செலுத்தவேண்டிய பொறுப்புகள் இருப்புநிலைக் குறிப்பில் முதலில் காண்பிக்கப்படுகிறது. அதாவது நடப்புப் பொறுப்புகள் முதலில் காட்டப்படுகிறது. அதனைத் தொடர்ந்து நிலை அல்லது நீண்டகாலப் பொறுப்புகளும் மற்றும் இறுதியாக உரிமையாளர் நிதியும் காண்பிக்கப்படுகிறது.

#### (ஆ) நிலைத்தன்மை ஒழுங்கு

இந்த முறை, மேற்கூறிய முறைக்கு முற்றிலும் மாறுபட்டது. இருப்புநிலைக் குறிப்பில் நிலைத்தன்மையுடைய சொத்துகள் அதாவது நற்பெயர் முதலிலும், அதைத் தொடர்ந்து சிறிது குறைந்த நிலைத்தன்மை உடைய சொத்துகள் இடம்பெறுகிறது. அதுபோலவே, உரிமையாளர் நிதி முதலிலும் அதனைத் தொடர்ந்து நிலை அல்லது நீண்டகாலப் பொறுப்புகளும், இறுதியாக நடப்புப் பொறுப்புகளும் இடம் பெறுகிறது. நிறுமச் சட்டத்தின்படி, நிறுமங்கள், நிலைத்தன்மை ஒழுங்குப்படியே இருப்புநிலைக் குறிப்பை தயார் செய்ய வேண்டும்.

### 12.5.4 இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படும் முறைகள்

ஒரு வணிக நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பை கீழ்க்கண்ட இரண்டு முறைகளில் தயாரிக்கலாம்.

(அ) கிடைமட்ட முறையில் (ஆ) செங்குத்து முறையில்

#### (அ) கிடைமட்ட முறையில் இருப்புநிலைக் குறிப்பு

கிடைமட்ட முறையில் சொத்துகள் இருப்புநிலைக் குறிப்பின் வலதுகை பக்கத்திலும் மற்றும் பொறுப்புகள் இடதுகை பக்கத்திலும் இடம்பெறுகிறது.



Accountancy Ch 12_TM.indd 272 25-01-2020 14:58:53

**.....ஆம் நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் | xxx | | **நிலைச் சொத்துகள்:** | | |
| கூட்டுக: நிகர இலாபம் / | | | i) புலனாகாச் சொத்துகள் | | |
| கழிக்க: நிகர நட்டம் | xxx | | நற்பெயர் | | xxx |
| | xxx | | புனையுரிமை | | xxx |
| கழிக்க: எடுப்புகள் | xxx | xxx | பதிப்புரிமை | | xxx |
| நீண்டகாலக் கடன்கள் | | xxx | வணிகக்குறி | | xxx |
| **நடப்புப் பொறுப்புகள்:** | | | கணினி மென்பொருள் | | xxx |
| வங்கி மேல்வரைப்பற்று, ரொக்கக் கடன் | xxx | | ii) புலனாகும் சொத்துகள் | | |
| | | | நிலம் | | xxx |
| கொடுபடவேண்டிய செலவுகள் | xxx | | கட்டடம் | xxx | |
| பெற வேண்டிய வருமானம் | xxx | | கழிக்க: தேய்மானம் | xxx | xxx |
| வங்கியிலிருந்து பெற்ற குறுகியகாலக் கடன் | xxx | | இயந்திர தளவாடங்கள் | xxx | |
| | | | கழிக்க: தேய்மானம் | xxx | xxx |
| பற்பல கடனீந்தோர் | xxx | | வாகனங்கள் | xxx | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | xxx | xxx | கழிக்க: தேய்மானம் | xxx | xxx |
| **ஒதுக்கு:** | | | அறைகலனும் பொருத்துகைகளும் | xxx | |
| பணியாளர் பயன்பாட்டு நிதி ஒதுக்கு | | xxx | கழிக்க: தேய்மானம் | xxx | xxx |
| வரி ஒதுக்கு | | xxx | | | |
| | | | **முதலீடுகள்** | | xxx |
| | | | **நடப்புச் சொத்துகள்:** | | |
| | | | சரக்கிருப்பு | | xxx |
| | | | முன்பணம் கொடுத்தது | | xxx |
| | | | பற்பல கடனாளிகள் | | xxx |
| | | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | xxx |
| | | | முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | | xxx |
| | | | பெறவேண்டிய வருமானம் | | xxx |
| | | | வங்கி ரொக்கம் | | xxx |
| | | | கை ரொக்கம் | | xxx |
| | | | **கற்பனைச் சொத்துகள்:** | | |
| | | | தொடக்கச் செலவுகள் | | xxx |
| | | xxx | | | xxx |



Accountancy Ch 12_TM.indd 273 25-01-2020 14:58:53

### (ஆ) செங்குத்து முறையில் இருப்புநிலைக் குறிப்பு

தனிவணிகரின் செங்குத்து முறையிலான இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

**.....ஆம் நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| **நடப்புச் சொத்துகள்:** | | |
| இறுதிச் சரக்கிருப்பு | xxx | |
| பற்பல கடனாளிகள் | xxx | |
| சந்தையிடுகை பிணையங்கள் | xxx | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | xxx | |
| கூடியுள்ள வருமானம் | xxx | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | xxx | |
| முன்பணம் கொடுத்தது | xxx | |
| வங்கி ரொக்கம் | xxx | |
| கைரொக்கம் | xxx | |
| **மொத்த நடப்புச் சொத்துகள்** | | xxx |
| கழிக்க : நடப்புப் பொறுப்புகள்: | | |
| பற்பல கடனீந்தோர் | xxx | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | xxx | |
| வங்கி மேல்வரைப்பற்று | xxx | |
| குறுகிய கால கடன்கள் | xxx | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | xxx | |
| **மொத்த நடப்புப் பொறுப்புகள்** | | xxx |
| **நிகர நடைமுறை முதல்** | | xxx |
| **கூட்டுக: நீண்டகால முதலீடுகள்** | | xxx |
| **கூட்டுக: நிலைச் சொத்துகள்:** | | |
| **நற்பெயர்** | xxx | |
| **நிலம் மற்றும் கட்டடம்** | xxx | |
| **இயந்திர தளவாடங்கள்** | xxx | |
| **அறைகலன்** | xxx | |
| **மொத்த நிலைச் சொத்துகள்** | | xxx |
| **ஈடுபடுத்தப்படும் முதல் (உரிமையாளர் நிதி மற்றும் புற நிதி இரண்டும்)** | | xxx |
| கழிக்க : நீண்டகாலப் பொறுப்புகள்: | | |
| கடன்கள் | xxx | |
| **மொத்த நீண்டகாலப் பொறுப்புகள்** | | xxx |
| **நிகரச் சொத்துகள்** | | **xxx** |
| **பங்களிப்பு:** | | |
| உரிமையாளர் முதல் | | |
| காப்பு மற்றும் மிகுதி | xxx | |
| | xxx | |
| **உரிமையாளர் நிதி** | | **xxx** |

## 12.5.5 இருப்புநிலைக் குறிப்பு தயாரித்தல்

தனியாள் வணிகருக்கும், கூட்டாண்மைக்கும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க எந்த படிவமும் வரையறுக்கப்படவில்லை. கூட்டுப்பங்கு நிறுமங்களுக்கு இந்திய நிறுமச் சட்டம் 2013, அட்டவணை III–ல் இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பதற்கான படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பெயரளவுக் கணக்குகளையும் மாற்றிய பிறகு இருப்பாய்வில் எஞ்சியிருக்கும் இருப்புகள் சொத்துக் கணக்குகளும் ஆள்சார் கணக்குகளும் ஆகும். இவற்றுள், பற்று இருப்பு சொத்துகள் எனவும் வரவிருப்பு பொறுப்புகள் எனவும் வகைப்படுத்தப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பில் காண்பிக்கப்படுகின்றது.



Accountancy Ch 12_TM.indd 274 25-01-2020 14:58:53

### 12.5.6 சொத்துகளையும் பொறுப்புகளையும் வகைப்படுத்துதல்

வணிக நிறுவனத்தில் உரிமையாளர் மற்றும் கடனீந்தோரிடமிருந்து பெறப்பட்ட வளங்கள் சொத்துகள் எனப்படும். இந்த வளங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான வளங்கள். வணிகத்தின் சொத்துகளில் ரொக்கம், சரக்கிருப்பு, இயந்திர தளவாடங்கள் முதலியன உள்ளடங்கும்.

### I. சொத்துகளின் வகைப்பாடு

சொத்துகளின் தன்மையைப் பொறுத்து அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**(அ) நிலைச் சொத்துகள்**

வணிகத்தில் தொடர்ந்து பயன்படுத்துவதற்காக வாங்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட சொத்துகள் நிலைச் சொத்துகள் ஆகும். இவை பல வருடங்களுக்கு பயன் தரக்கூடிய சொத்துகள். உதாரணமாக, நிலம் மற்றும் கட்டடம், பொறி மற்றும் இயந்திரம், மோட்டார் வாகனங்கள், அறைகலன் முதலியன. ஃபின்னி மற்றும் மில்லர் கூற்றுப்படி, "நிலைச்சொத்துகள், விற்பனை செய்யும் நோக்கத்திற்காக இல்லாமல் வணிக செயல்பாடுகளின் பயன்பாட்டிற்காக உள்ள நிலைத் தன்மையுடைய சொத்துகள் ஆகும்". இவ்வகைச் சொத்துகள் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுகிறது, விற்பனைக்காக அல்ல. சொத்துத் தீர்வு மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்கப்பட்டு எப்போதும் இருப்புநிலைக்குறிப்பில் தேய்மானம் கழிக்கப்பட்ட அடக்கவிலையில் காண்பிக்கப் படுகின்றது. நிலைச் சொத்துகளை i) புலனாகும் நிலைச் சொத்துகள் ii) புலனாகா நிலைச் சொத்துகள் என்று வகைப்படுத்தப்படுத்தலாம்.

(i) **புலனாகும் நிலைச் சொத்துகள்**

புலனாகும் நிலைச் சொத்துகளுக்கு உருவ வடிவம் உண்டு. இவற்றை பார்க்கவும், தொட்டு உணரவும் முடியும். எடுத்துக்காட்டு : இயந்திரத் தளவாடங்கள், கட்டடம் மற்றும் அறைகலன்.

(ii) **புலனாகா நிலைச் சொத்துகள்**

புலனாகா நிலைச் சொத்துகளுக்கு உருவ வடிவம் கிடையாது. இவற்றை பார்க்கவும், தொட்டு உணரவும் முடியாது. எடுத்துக்காட்டு : நற்பெயர், வணிகக்குறி, பதிப்புரிமை மற்றும் காப்புரிமை. புலனாகாச் சொத்துகளும் புலனாகும் சொத்துகளைப் போன்று அதிக மதிப்புடையது. ஏனெனில் இவ்வகைச் சொத்துகளும் இலாபம் ஈட்டுவதற்கு உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, நற்பெயர் வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கு உதவுகிறது. காப்புரிமை, பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான பட்டய உரிமையைப் பிரதிபலிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா? கைரொக்கம் மற்றும் சரக்கிருப்பு புலனாகும் சொத்துகள் ஆகும்.

**(ஆ) நடப்புச் சொத்துகள்**

நடப்புச் சொத்துகள் ரொக்க வடிவிலோ அல்லது வழக்கமான வணிகப் போக்கில் அல்லது ஒரு வருடத்திற்குள் எளிதில் ரொக்கமாக மாற்றக் கூடிய சொத்துகள் ஆகும். ஹோவர்ட் மற்றும் அப்டன் அவர்கள் கூற்றுப்படி, "நடப்புச் சொத்துகள் என்பது, குறுகிய காலத்தில், சாதாரணமாக ஒரு வருடத்திற்குள் வழக்கமான வணிகப் போக்கில் ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துகள் ஆகும்." நடப்புச் சொத்துகளில் கைரொக்கம், வங்கி ரொக்கம், குறுகியகால முதலீடுகள், பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு, கடனாளிகள், முன்கூட்டிச் செலுத்தியச் செலவுகள், கூடியுள்ள வருமானம், இறுதிச் சரக்கிருப்பு போன்றவை உள்ளடங்கும். இவ்வகைச் சொத்துகளில் இறுதிச் சரக்கிருப்பு அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இவற்றில் எது குறைவோ அதில் மதிப்பிடப்படும். கடனாளிகள், ஏற்புடைய வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு கழிக்கப்பட்டு காண்பிக்கப் படுகிறது.

#### மாணவர் குறிப்பு

முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நடப்புச் சொத்துகளாக கருதப்படுகிறது. முன்கூட்டிச் செலுத்திய செலவுகளிலிருந்து ரொக்கம் பெறப்படாவிட்டாலும், மேற்கொண்டு செலவுகள் செய்யாமலே அதன் சேவை கிடைக்கிறது.

**(இ) நீர்மைச் சொத்துகள்**

நீர்மைச் சொத்துகள், ரொக்க வடிவிலோ அல்லது உடனடியாக, மிகக்குறுகிய காலத்தில் எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய வகையிலோ இருக்கக் கூடிய சொத்துகள் ஆகும். வங்கி ரொக்கம், பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு, குறுகிய கால முதலீடுகள், கடனாளிகள் மற்றும் பெறவேண்டிய வருமானம் போன்றவை. அதாவது, முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் மற்றும் இறுதிச் சரக்கிருப்பு நடப்புச் சொத்துகளிலிருந்து கழிக்கப்பட்டால் எஞ்சியிருப்பது நீர்மைச் சொத்துகள் ஆகும்.

**(ஈ) முதலீடுகள்**

பிற நிறுவனங்களின் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், பிணையங்கள் மற்றும் பிற பத்திரங்களில் முதலீடு செய்வது முதலீடுகள் என்று அழைக்கப்படுகிறது. இந்த முதலீடு ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திற்கு செய்யப்பட்டால் அது நீண்டகால முதலீடுகள் என அழைக்கப்படுகிறது. இந்த முதலீடு ஒரு வருடத்திற்கு குறைவான காலத்திற்கு செய்யப்பட்டால் அது குறுகியகால முதலீடுகள் என அழைக்கப்பட்டு நடப்புச் சொத்தாக காண்பிக்கப்படுகிறது.

**(உ) பயன் தீரும் சொத்துகள்**

இவ்வகையான சொத்துகள் தோண்டியெடுக்கும் செயல்முறையில், தன் மதிப்பை படிப்படியாக இழக்கிறது. எடுத்துக்காட்டு: சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் முதலியன.

**(ஊ) கற்பனை அல்லது பெயரளவுச் சொத்துகள்**

இவை பெயரளவில் சொத்துகளாக கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் சொத்துகள் அல்ல. இவ்வகைச் சொத்துகள் உண்மையில் சொத்துகளாக இல்லை என்றாலும், வருங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு படிப்படியாக இலாப நட்டக் கணக்கில் போக்கெழுதுவதற்காக, சொத்துகள் பக்கம் காண்பிக்கப்படுகின்றது. இதில் ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திற்கு பயன்தரக்கூடிய இன்னும் போக்கெழுதப்படாத செலவுகள் அதாவது, விளம்பரச் செலவுகள், தொடக்கச் செலவுகள் முதலியன உள்ளடங்கும்.

## II. பொறுப்புகளின் வகைப்பாடு

பொறுப்புகள் அல்லது உரிமையாளர் பங்குகள் வணிக நிறுவனத்தின் மீது கோரப்பட்ட உரிமைகள் ஆகும். இவை வணிக நிறுவனம் வெளியாட்கள் (புற நிதி) மற்றும் உரிமையாளர்களுக்கு (உரிமையாளர் நிதி/ அக நிதி) கொடுக்க வேண்டிய தொகையைக் குறிக்கிறது.

பொறுப்புகள் அதன் தன்மையைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் படுகிறது.

**(அ) நிலை அல்லது நீண்ட காலப் பொறுப்புகள்**

ஒரு வருடம் அல்லது அதற்கு மேலான காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகள் நீண்டகாலப் பொறுப்புகள் எனப்படும்.

**(ஆ) நடப்பு அல்லது குறுகிய காலப் பொறுப்புகள்**

ஒரு இயக்க சுழற்சிக்குள் அல்லது ஒரு வருட காலத்திற்குள் செலுத்த எதிர்பார்க்கும் செலவுகள் நடப்பு அல்லது குறுகிய காலப் பொறுப்புகள் ஆகும். இவற்றில் வங்கி மேல்வரைப்பற்று, கடனீந்தோர், செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு, கொடுபட வேண்டிய செலவுகள் முதலியன உள்ளடங்கும்.

**(இ) நிகழ்வடையாப் பொறுப்புகள்**

இவ்வகைப்பொறுப்புகள் இருப்புநிலைக்குறிப்புதயாரிப்பின்போதுபொறுப்புகளாகஉறுதிப்படுத்தப்படாதவை ஆகும். இவ்வகை பொறுப்புகள் நிகழலாம் அல்லது நிகழாமல் இருக்கலாம். இவ்வகைப் பொறுப்புகள், தற்போது உறுதியாக இல்லாத சில குறிப்பிட்ட நிகழ்வுகள் நடந்தால் மட்டுமே செலுத்த வேண்டிவரும். இல்லையெனில் செலுத்த வேண்டியதில்லை. இவ்வகைப் பொறுப்புகள் பின்வருமாறு:



Accountancy Ch 12_TM.indd 276 25-01-2020 14:58:53

- மாற்றுச்சீட்டு தள்ளுபடி செய்ததால் ஏற்பட்ட பொறுப்புகள்
  வங்கியில் தள்ளுபடி செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு செலுத்த வேண்டிய நாளில் ஏற்குநரால் மறுக்கப்பட்டால், நிறுவனம் வங்கிக்கு செலுத்த வேண்டிய பொறுப்பாகிறது.
- நீதிமன்ற வழக்கு நிலுவையினால் ஏற்பட்ட பொறுப்பு
  நிலுவையில் இருந்த நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு, நிறுவனத்திற்கு எதிராக இருந்தால் அது நிறுவனத்தின் உண்மையான பொறுப்பாகிறது.
- மற்றொரு நபருக்கு கொடுத்த உத்தரவாதத்தினால் ஏற்பட்ட பொறுப்பு
  நிறுவனம் மற்றொரு நபரின் கடனுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கும் போது, அந்த நபர் தன்னுடைய கடனை செலுத்த தவறினால், நிறுவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது.

**மாணவர் குறிப்பு**

(i) நிகழ்வடையாப் பொறுப்புகள் இருப்புநிலைக் குறிப்பில் காண்பிக்கப்படுவதில்லை. ஆனால், இவ்வகைப் பொறுப்புகள் இருப்பதை அறிவதற்காக இருப்புநிலைக் குறிப்பின் கீழ் அடிக்குறிப்பாகக் காட்டப்படுகிறது.

(ii) முதல்: முதல் என்பது நிறுவனத்தை நடத்துவதற்காக உரிமையாளரால் வழங்கப்பட்ட பணம் அல்லது பணத்தின் மதிப்பு ஆகும். சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்கு உள்ள வேறுபாடு உரிமையாளர் நிதி ஆகும்.

உரிமையாளர் நிதி= வழங்கிய முதல் + குவிக்கப்பட்ட இலாபம்

## 12.6 இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்

இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:

| அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| 1. தன்மை | இருப்பாய்வு குறிப்பிட்ட நாளுக்குரிய பேரேட்டுக் கணக்கு இருப்புகளின் பட்டியல் ஆகும். | இருப்புநிலைக் குறிப்பு குறிப்பிட்ட நாளன்றைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நிலையைக் காட்டும் அறிக்கை ஆகும். |
| 2. நோக்கம் | கணக்கியல் பதிவுகளின் கணக்கீட்டு சரித்தன்மையை பரிசோதிக்க இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது. | இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் நிதி நிலையை அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது. |
| 3. உள்ளடக்கம் | இது ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் போன்ற அனைத்துக் கணக்கு இருப்புகளின் தொகுப்பாகும். | இது ஆள்சார் மற்றும் சொத்து கணக்குகளின் இறுதி இருப்புகளை மட்டும் காட்டும் அறிக்கை ஆகும். |
| 4. வடிவமைப்பு | இருப்பாய்வு பற்று இருப்பு மற்றும் வரவு இருப்பு பத்திகளை உள்ளடக்கியது. | அனைத்து இனங்களும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது |
| 5. நிலை | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் முன் தயாரிக்கப்படுகிறது. | இருப்பாய்வு மற்றும் வியாபார, இலாபநட்டக் கணக்கு தயாரித்த பின்னர் தயாரிக்கப்படுகிறது. |
| 6. காலம் | இது காலமுறைதோறும், அதாவது மாத இறுதியில், காலாண்டு மற்றும் அரையாண்டு இறுதியில் தயாரிக்கப்படுகிறது. | இது பொதுவாக கணக்காண்டு இறுதியில் தயாரிக்கப்படுகிறது.. |
| 7. வரிசை | இருப்பாய்வில் இருப்புகள் வரிசைப்படி ஒழுங்குப் படுத்தப்படவேண்டிய அவசியமில்லை. | இருப்புநிலைக் குறிப்பில் இருப்புகள் வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது |
| 8. கட்டாயம் | இருப்பாய்வு தயாரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. | சில தருணங்களில் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. |

### மாணவர் குறிப்பு

வினாவில் இருப்பாய்வு தரப்படவில்லை எனில் முதலில் இருப்பாய்வு தயாரிக்க வேண்டும். இருப்பாய்வில் ஏதேனும் வேறுபாடு இருந்தால், அந்த வேறுபாடு 'அனாமத்துக் கணக்கு' என்ற கணக்கிற்கு மாற்றப்பட்டு இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்படுகிறது.

### எடுத்துக்காட்டு 8

நிருபனின் இருப்புகளிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 8,00,000 | |
| நிலம் மற்றும் கட்டடம் | 6,00,000 | |
| அறைகலன் | 1,50,000 | |
| கைரொக்கம் | 20,000 | |
| வங்கி மேல்வரைப்பற்று | | 1,80,000 |
| கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் | 3,20,000 | 2,40,000 |
| பெறுதற்குரிய மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | 60,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,00,000 | |
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | |
| முதல் | | 15,00,000 |
| எடுப்புகள் | 1,30,000 | |
| நிகர இலாபம் | | 6,20,000 |
| | 26,00,000 | 26,00,000 |

### தீர்வு

**நிருபனின் ஏடுகளில்**

**ப 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு வ**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் | 15,00,000 | | நிலம் மற்றும் கட்டடம் | | 6,00,000 |
| கூட்டுக:நிகர இலாபம் | 6,20,000 | | பொறி மற்றும் இயந்திரம் | | 8,00,000 |
| | 21,20,000 | | அறைகலன் | | 1,50,000 |
| கழிக்க: எடுப்புகள் | 1,30,000 | 19,90,000 | குறுகிய கால முதலீடுகள் | | 80,000 |
| கடனீந்தோர் | | 2,40,000 | இறுதிச் சரக்கிருப்பு | | 4,00,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 60,000 | கடனாளிகள் | | 3,20,000 |
| | | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 1,00,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | | 1,80,000 | கைரொக்கம் | | 20,000 |
| | | **24,70,000** | | | **24,70,000** |

### எடுத்துக்காட்டு 9

பின்வரும் சரண் என்பவரின் இருப்பாய்விலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.



Accountancy Ch 12_TM.indd 278 25-01-2020 14:58:53

31.12.2017 அன்றைய இறுதிச்சரக்கிருப்பு ₹ 2,50,000 என்று மதிப்பிடப்பட்டது.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1.1.2017) | 2,00,000 | பற்பல கடனீந்தோர் | 12,000 |
| கொள்முதல் | 7,50,000 | கொள்முதல் திருப்பம் | 30,000 |
| உள்தூக்குக் கூலி | 75,000 | விற்பனை | 10,20,000 |
| கூலி | 3,65,000 | பெற்ற கழிவு | 53,000 |
| சம்பளம் | 1,20,000 | முதல் | 33,00,000 |
| பழுதுபார்ப்புச் செல்வுகள் | 12,000 | | |
| வாடகையும், வரியும் | 2,80,000 | | |
| கைரொக்கம் | 97,000 | | |
| நிலம் | 21,50,000 | | |
| எடுப்புகள் | 1,66,000 | | |
| வங்கி வைப்புகள் | 2,00,000 | | |
| | 44,15,000 | | 44,15,000 |

**தீர்வு**

**சரணின் ஏடுகளில்**

**ப 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கு வ**

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | | 2,00,000 | விற்பனை | | 10,20,000 |
| கொள்முதல் | 7,50,000 | | இறுதிச் சரக்கிருப்பு | | 2,50,000 |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | 30,000 | 7,20,000 | மொத்த நட்டம் கீ/ இ | | **90,000** |
| உள்தூக்குக் கூலி | | 75,000 | | | |
| கூலி | | 3,65,000 | | | |
| | | 13,60,000 | | | 13,60,000 |
| மொத்த நட்டம் கீ/கொ | | 90,000 | பெற்ற கழிவு | | 53,000 |
| சம்பளம் | | 1,20,000 | நிகர நட்டம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | **4,49,000** |
| பழுதுபார்ப்புச் செலவுகள் | | 12,000 | | | |
| வாடகையும், வரியும் | | 2,80,000 | | | |
| | | **5,02,000** | | | **5,02,000** |

**2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் | 33,00,000 | | நிலம் | | 21,50,000 |
| கழிக்க : நிகர நட்டம் | 4,49,000 | | இறுதிச் சரக்கிருப்பு | | 2,50,000 |
| | 28,51,000 | | வங்கி வைப்புகள் | | 2,00,000 |
| கழிக்க: எடுப்புகள் | 1,66,000 | 26,85,000 | கைரொக்கம் | | 97,000 |
| பற்பல கடனீந்தோர் | | 12,000 | | | |
| | | **26,97,000** | | | **26,97,000** |

**மாணவர் குறிப்பு:**

வியாபாரக் கணக்கு, மற்றும் இலாப நட்டக் கணக்கு ஆகிய இரண்டும் சேர்த்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பகுதி வியாபாரக் கணக்கு, மற்றும் இரண்டாவது பகுதி இலாப நட்டக் கணக்கு ஆகும்.

## நினைவில் கொள்ள வேண்டியவை

- வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு பெயரளவுக் கணக்கின் இயல்பினை உடையது. எனவே இந்த கணக்கை தயாரிக்கும்போது பெயரளவுக் கணக்கு விதி பின்பற்றப்படுகிறது.
- வியாபாரக்கணக்கின் பற்றுப்பக்கத்தில் அனைத்து நேரடிச் செலவுகள் மற்றும் தொடக்கச் சரக்கிருப்பு காண்பிக்கப்படுகின்றன.
- நேரடிச் செலவுகள், வாங்கிய சரக்குகளின் கொள்முதல் விலை, சரக்குகளை வணிக வளாகம் அல்லது கிடங்கிற்கு கொண்டு வர ஆகும் செலவுகள், சரக்குகளை விற்பனைக்கு தயாரான நிலைக்கு கொண்டு வர ஆகும் பிற செலவுகளை உள்ளடக்கியது.
- வியாபாரக் கணக்கின் வரவுப் பக்கத்தில் அதாவது விற்பனை மற்றும் இறுதிச் சரக்கிருப்பு காண்பிக்கப்படுகின்றன.
- இலாப நட்டக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் மறைமுகச் செலவுகள் மற்றும் நட்டங்கள் காண்பிக்கப்படுகின்றன.
- இலாப நட்டக் கணக்கின் வரவுப்பக்கத்தில் மறைமுக வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள் இடம் பெறுகின்றன.
- மறைமுகச் செலவுகள் என்பது, அலுவலக, நிர்வாக, விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள் ஆகும்.
- மறைமுக வருமானங்கள் அல்லது ஆதாயங்கள் வணிக நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு நேரடித் தொடர்பு இல்லாத வருமானங்களும் அல்லது ஆதாயங்களும் ஆகும். எடுத்துக்காட்டு: வங்கி வைப்புகளிலிருந்து பெறப்பட்ட வட்டி.
- இருப்புநிலைக் குறிப்பு என்பது ஒரு அறிக்கை, கணக்கல்ல இதன் இடது பக்கத்தில் முதல் உட்பட்ட பொறுப்புகள் மற்றும் வலது பக்கத்தில் சொத்துகள் இடம் பெறுகின்றன.
- சொத்துகள் வணிக நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களாகும். பொறுப்புகள் வணிகத்தின் மீது கோரப்பட்ட உரிமைகள் அல்லது வணிகம் வெளியாட்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு தர வேண்டிய தொகையை குறிக்கிறது.

## சுய ஆய்வு வினாக்கள்

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

MHIPL1

1. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர்___________________

   (அ) நிலையான சொத்து (ஆ) நடப்புச் சொத்து

   (இ) கற்பனைச் சொத்து (ஈ) புலனாகாச் சொத்து

2. இருப்புநிலைக் குறிப்பு என்பது _______________

   (அ) ஓர் கணக்கு

   (ஆ) ஓர் அறிக்கை

   (இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை

   (ஈ) மேல் கூறியவற்றில் எதுவுமில்லை

3. வணிகத்தின் நிகர இலாபம் ___________ அதிகரிக்கும்

   (அ) எடுப்புகளை (ஆ) பெறுதல்களை

   (இ) பொறுப்புகளை (ஈ) முதலினை

4. உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்?

   (அ) வியாபாரக் கணக்கில் (ஆ) இலாப நட்டக் கணக்கில்

   (இ) கடன் பக்கத்தில் (ஈ) சொத்து பக்கத்தில்



Accountancy Ch 12_TM.indd 280 25-01-2020 14:58:53

5. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
(அ) வியாபாரக் கணக்கில் (ஆ) இலாப நட்டக் கணக்கில்
(இ) கடன் பக்கத்தில் (ஈ) சொத்து பக்கத்தில்

6. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் ___________ காண்பிக்கிறது.
(அ) இலாபத்தினை (ஆ) நிதி நிலையினை
(இ) விற்பனையை (ஈ) கொள்முதலை

7. இருப்பாய்வில் காணப்படும் எடுப்புகள்
(அ) கொள்முதலோடு கூட்டப்படும் (ஆ) கொள்முதலிலிருந்து கழிக்கப்படும்
(இ) முதலோடு கூட்டப்படும் (ஈ) முதலிலிருந்து கழிக்கப்படும்

8. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்?
(அ) வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்
(ஆ) இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்
(இ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
(ஈ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

9. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?
(அ) ரொக்கம் (ஆ) சரக்கிருப்பு
(இ) அறைகலன் (ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

10. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
(அ) ஓர் நடப்புச் சொத்து (ஆ) ஓர் நீர்மைச் சொத்து
(இ) புலனாகும் சொத்து (ஈ) புலனாகாச் சொத்து

**விடை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (ஆ) | 2 (ஆ) | 3 (ஈ) | 4 (அ) | 5 (இ) | 6 (ஆ) | 7 (ஈ) | 8 (ஆ) | 9 (இ) | 10 (ஈ) |

## II மிகக் குறுகிய வினாக்கள்

1. வியாபாரக் கணக்கு பற்றி குறிப்பெழுதுக.
2. பயன் தீரும் சொத்துகள் என்றால் என்ன?
3. நிலைச் சொத்துகள் என்றால் என்ன?
4. கொள்முதல் திருப்பம் என்றால் என்ன?
5. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகளை குறிப்பிடுக.
6. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் இரண்டு வேற்றுமைகளை எழுதுக.
7. வியாபாரக் கணக்கு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?
8. இலாப நட்டக் கணக்கு தயாரித்தலின் தேவை என்ன?

## III குறுகிய வினாக்கள்

1. இறுதிக் கணக்குகள் என்றால் என்ன? அதன் பகுதிகள் யாவை?
2. இறுதிப் பதிவுகள் என்றால் என்ன? அவை ஏன் பதிவு செய்யப்படுகின்றன?
3. மொத்த இலாபம் மற்றும் நிகர இலாபம் என்றால் என்ன?
4. "இருப்பு நிலைக் குறிப்பு ஓர் கணக்கல்ல" – விளக்குக
5. இருப்பு நிலைக் குறிப்பு தயாரித்தலின் நன்மைகள் யாவை?
6. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை குழுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குப்படுத்துதல் என்றால் என்ன?

## IV பயிற்சிக் கணக்குகள்

1. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

(**விடை:** மொத்த இலாபம்: ₹ 10,720)

2. சரவணனின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் மூலம், டிசம்பர் 31, 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த இலாபத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,50,000 | ஆண்டிற்கான நிகர விற்பனை | 4,00,000 |
| நேரடிச் செலவுகள் | 8,000 | ஆண்டிற்கான நிகர கொள்முதல் | 1,50,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 25,000 | | |

(**விடை**: மொத்த இலாபம்: ₹ 1,17,000)

3. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31, மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | உள் திருப்பம் | 7,000 |
| கொள்முதல் | 27,000 | நிலக்கரி மற்றும் எரிவாயு | 3,300 |
| விற்பனை | 40,000 | உள்தூக்குக் கூலி | 2,600 |
| கூலி | 2,500 | இறுதிச் சரக்கிருப்பு | 5,200 |
| வெளித்திருப்பம் | 5,200 | | |

(**விடை**: மொத்த இலாபம்: ₹ 5,500)

4. விக்டரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31, டிசம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரிகட்டப்பட்ட கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 7,000 |
| விற்பனை | 90,000 | உள்தூக்குக் கூலி | 3,000 |
| சரக்கு கொள்முதலுக்கான உரிமைத்தொகை | 4,000 | சரக்கு கொள்முதலுக்கான இறக்குமதி வரி | 6,000 |
| சரக்கு கொள்முதலுக்கான நகர் நுழைவு வரி | 2,000 | கொள்முதல் மீதான கப்பல்துறைச் செலவுகள் | 5,000 |
| சரக்கு உற்பத்திக்கான அடக்க விலை | 5,000 | | |

(**விடை**: மொத்த நட்டம்: ₹ 15,000)

(குறிப்பு: சரிகட்டப்பட்ட கொள்முதல் கொடுக்கப்பட்டிருந்தால் இறுதிச் சரக்கிருப்பு வியாபாரக் கணக்கில் காண்பிக்கப்படமாட்டாது)

5. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

(**விடை**: சரக்கு விற்பனைக்கான அடக்கம்: ₹ 82,000)

(குறிப்பு: சரக்கு விற்பனைக்கான அடக்கத்தில் மறைமுக செலவுகள் சேராது)



Accountancy Ch 12_TM.indd 282 25-01-2020 14:58:54

6. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து விற்பனைத் தொகையை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 30,000 | இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 2,00,000 | விற்பனையில் மொத்த இலாப விகிதம் | 30% |

(**விடை:** விற்பனை ₹ 3,00,000)

7. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்தம் இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | தள்ளுபடி பெற்றது | 3,000 |
| அலுவலக சொத்துகள் மீதான தேய்மானம் | 8,000 | வெளிதூக்குக் கூலி | 2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | அலுவலக கட்டடம் மீதான காப்பீடு | 3,500 |
| விளம்பரம் | 4,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 | உள் ஏற்றிச் செல் செலவு | 1,000 |

(**விடை:** நிகர இலாபம்: ₹ 11,000)

(குறிப்பு: உள் ஏற்றிச் செல் செலவு, நேரடிச் செலவு என்பதால் இலாப நட்டக் கணக்கில் இடம் பெறாது)

8. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2016 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த நட்டம் | 60,000 | அச்சு மற்றும் எழுது பொருள் (அலுவலகம்) | 2,000 |
| விற்பனை மேம்பாட்டிற்கான செலவுகள் | 5,000 | சட்டச் செலவுகள் | 5,000 |
| வழங்கல் செலவுகள் | 15,000 | வாராக்கடன் | 1,000 |
| அளித்த கழிவு | 7,000 | தேய்மானம் | 2,000 |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | 5,000 | வாடகை பெற்றது | 4,000 |
| கட்டுமச் செலவுகள் (விற்பனை மீது) | 4,000 | காப்பீட்டிற்கு உட்படாத, தீயினால் ஏற்பட்ட நட்டம் | 3,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | | |

(**விடை:** நிகர நட்டம்: ₹ 1,02,000)

9. கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து, வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (01.01.2017) | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,100 |
| நிதிசார் செலவுகள் செலுத்தியது | 3,500 | விற்பனைச் செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1,000 | அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்புச் செலவுகள் | 600 |

2017 டிசம்பர் 31 அன்றைய இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹ 4,500

(**விடை:** மொத்த இலாபம்: ₹ 14,000; நிகர இலாபம்: ₹ 4,200)



Accountancy Ch 12_TM.indd 283 25-01-2020 14:58:54

10. பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கை ரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | இயந்திரம் | 43,200 |

(**விடை**: இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 76,000)

11. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | விற்பனை | 7,000 |
| கூலி | 2,700 | கொள்முதல் | 3,300 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,000 | சம்பளம் | 2,600 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | முதல் | 52,000 |
| இயந்திரம் | 52,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கடனீந்தோர் | 8,000 | | |

(**விடை**: மொத்த இலாபம் : ₹ 2,500 ; நிகர இலாபம் : ₹ 2,400;
இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 62,400)

12. 2018, மார்ச் 31 ஆம் நாளன்று டெரி என்ற வியாபாரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 10,000 | விற்பனை | 1,22,500 |
| ரொக்கம் | 2,500 | கடனீந்தோர் | 5,000 |
| வங்கி | 5,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,000 |
| உள்ஏற்றிச் செல் செலவு | 750 | முதல் | 1,00,000 |
| கொள்முதல் | 95,000 | | |
| எடுப்புகள் | 4,500 | | |
| கூலி | 27,500 | | |
| இயந்திரம் | 50,000 | | |
| கடனாளிகள் | 13,500 | | |
| அலுவலக அஞ்சல் செலவுகள் | 150 | | |
| பல்வகைச் செலவுகள் | 850 | | |
| வாடகை கொடுத்தது | 2,500 | | |
| அறைகலன் | 17,250 | | |
| | **2,29,500** | | **2,29,500** |

இறுதிச் சரக்கிருப்பு (31.3.2018) ₹ 8,000

(**விடை**: மொத்த நட்டம் : ₹ 2,750 ; நிகர நட்டம் : ₹ 6,250;
இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் : ₹ 96,250)

உங்களுக்குத் தெரியுமா?

இயக்க இலாபம் என்பது வணிக நிறுவனத்தின் வழக்கமான இயக்க நடவடிக்கைகளின் மூலம் ஈட்டும் இலாபம் ஆகும். இயக்க வருவாய்க்கும், இயக்க அடக்கவிலைக்கும் உள்ள வேறுபாடு இயக்க இலாபம் எனப்படும்.

இயக்க இலாபம் = இயக்க வருவாய் – இயக்க அடக்கவிலை

= நிகர விற்பனை – (விற்ற பொருளின் அடக்கவிலை + இதர இயக்கச் செலவுகள்)



Accountancy Ch 12_TM.indd 284 25-01-2020 14:58:54

= நிகரவிற்பனை – (விற்ற பொருளின் அடக்கவிலை + அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள் + விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்)

இயக்க இலாபம் வட்டி மற்றும் வரி செலுத்துவதற்கு முன் உள்ள வருமானம் (EBIT) எனவும் அழைக்கப்படுகிறது.

இயக்க நடவடிக்கைகள் ஒரு வணிக நிறுவனத்தின் சாதாரண அல்லது முக்கிய நடவடிக்கைகள் தொடர்பானது. இயக்க வருவாய் என்பது வணிகத்தில் வழக்கமான போக்கில் ஈட்டும் வருவாயைக் குறிக்கிறது. அதைப்போல இயக்கச்செலவு என்பது ஒரு வணிக நிறுவனத்தில் சாதாரணமான போக்கில் மேற்கொள்ளும் செலவினைக் குறிக்கிறது.

இயக்க அடக்கவிலை, விற்ற பொருளின் அடக்கவிலை மற்றும் மறைமுக இயக்கச் செலவுகளான அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள், விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள் போன்ற மறைமுகச் செலவுகளை உள்ளடக்கியது. ஆனால் கடன்மீது வட்டி, பங்காதாயம் போன்ற நிதிசார் செலவினம் மற்றும் வருவாயினம் இதில் சேர்க்கப்படுவதில்லை.

**நிகழ்வாய்வு**

அபினவ் என்பவர் பால் பொருட்கள் விற்பனை செய்யும் சிறிய கடை ஒன்றைத் தொடங்கினார். அவர் உரிய கணக்கேடுகளைப் பராமரிக்க விரும்பினார். ஆனால், அவருக்கு கணக்கியல் குறித்த புரிதல் மிகக் குறைவாகவே இருந்தது. அவர் கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு மற்றும் ரொக்க ஏடு முதலிய மூன்று ஏடுகளை மட்டுமே பராமரித்து வந்தார். அவர் சில பால்பண்ணைப் பொருட்களையும் அவற்றைப் பாதுகாப்பதற்கு குளிர்சாதனப்பெட்டி ஒன்றையும் வாங்கி அதற்கான தொகையை காசோலை மூலம் செலுத்தினார். ஆனால், இந்நடவடிக்கைகள் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டது. அவர் போக்குவரத்துச் செலவுக்காகவும் மற்றும் சரக்குகளை வண்டியிலிருந்து இறக்கியவருக்கு சிறிது பணமும் செலவழித்தார். இந்நடவடிக்கைகளை ரொக்க ஏட்டில் பதிவு செய்தார்.

அடுத்த சில வாரங்களுக்கு ரொக்கம் மற்றும் கடன் ஆகிய இரண்டு அடிப்படையிலும் விற்பனை செய்தார். ஆனால் அனைத்து விற்பனையும் விற்பனை புத்தகத்தில் பதிவு செய்தார். அந்த மாத நடுவில் சொந்த உபயோகத்திற்காக அவருக்கு சிறிது பணம் தேவைப்பட்டது. அதற்காக, அவர் வணிகத்திலிருந்து பணம் எடுத்தார். ஆனால். அதை குறித்த ஏடுகளில் பதிவு செய்யவில்லை.

இப்போது பின்வருவன குறித்து விவாதிக்கவும்

- அபினவிற்கு கணக்காளர் உதவி தேவை என நினைக்கிறீர்களா? ஏன் அவ்வாறு நினைக்கிறீர்கள்?
- அவர் போதுமான கணக்கேடுகளைப் பராமரித்து வருகின்றாரா?
- என்ன வகையான மற்ற கணக்கேடுகளை அவர் பராமரிக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?
- அவர் குளிர்சாதனப்பெட்டி வாங்கிய நடவடிக்கையை, கொள்முதல் ஏட்டில் பதிவு செய்தாரெனில் இலாபத்தில் ஏற்படும் விளைவு என்ன?
- சொந்த உபயோகத்திற்கு பணம் எடுத்தது பதிவு செய்ய வேண்டிய முக்கியமான ஒன்றா? இது இறுதி கணக்குகளைப் பாதிக்குமா?
- இந்த சூழ்நிலைக்குத் தொடர்பான கணக்கியல் கோட்பாடுகள் சிலவற்றை கண்டறியவும்.

**தொடர் ஆய்விற்கு**

இறுதி கணக்குகள் தயாரிக்கும் முறை எல்லா வணிக அமைப்பிற்கும் ஒரே தன்மையுடையதா?

## பார்வை


1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.




Accountancy Ch 12_TM.indd 285 25-01-2020 14:58:54